# சிரித்திரன்

Double

ஒருவர்: அண்ண... யாழ்ப்பாணத்தவர் மண்தின்கினமாம்.

மற்றவர்: அதுதானே அண்ண தேர்தலில் மண் கவ்விப் போட்டு நிக்கிறார்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி கிளை நூலகம்.

நானும் பொம்மை! நீயும் பொம்மை!

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
-6-4-1994




பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி கிளை நூலகம்.



**மாசி பங்குனி**
**1994**
**விலை 15.00**

09 JUN 1994

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
சண்டிக்குளி கிளை நூலகம்.

# சிரித்திரன்

செய்தொழிலே தெய்வம்
சிரிப்பே சிவயம்

நகை: 33 மாசி பங்குனி-1994 சுவை: 02

## முன் முறுவல்

**ஒருத்தி:-** மணமகள் அந்நிய நாட்டுக்குப் போனாள் கடிதமேதும் போட்டவளே?

**மற்றவள்:-** போனநாள் துவக்கம் குளிரில் வாய் கிட்டினதாம். இதுவரை மாப்பிள்ளையோட கூட கதைக்கவில்லையாம். அதுக்குள்ள ஒரு கடிதமே.

---

**தந்தை:-** உன்னை ஆர் மாரிக்குளத்துக்கு போகச் சொன்னது?

**மகன்:-** கிளாலியாலை போக நேர்ந்தாலும் நீந்தத் தெரிஞ்சிருக்கிறது நல்லது தானேப்பா.

---

**ஒருவன்:-** நீங்கள் எங்கே "ஸ்ருடியோ" வைத்திருக்கிறியள். நிரம்ப போட்டோக்கள் கிடக்கு.

**மற்றவன்:-** நான் கல்யாணத் தரகன். எல்லாம் அந்நிய நாட்டு மாப்பிள்ளையின் போட்டோதான் வைச்சிருக்கன்.

---

**தாய்:-** உனக்கு பெண் பிடித்துவிட்டதா?

**மகன்:-** இல்லை.

**தாய்:-** அப்போ ஏன் பிடிச்சிட்டுது என்று பெண் வீட்டாருக்கு சொல்லியிட்டு வந்த நீ.

**மகன்:** பெண் கராட்டி உடையோடு நின்றாள். அதுதான் அப்படி சொல்லியிட்டன்.

---

**ஒருவன்:-** என்ன சூட்கேஸ்ஸோடு கொழும்பாலை வாறியோ.

**மற்றவன்:-** பொச்சு வாங்கி வாறன் மனைவி எரிபொருள் இல்லையெண்டு எரிச்சபடி.

---

**முதல் முதலை:-** ஏன் அந்த ஆளை பிடித்திட்டு விட்டனி?

**இரண்டாம் முதலை:-** இவன் குடிகாரன் நான் சுவைக்கும் ஈரலும் இருதயமும் இல்லை.

---

**ஆண்காகம்:-** வீண் பேச்சுப் பேசினால் நான் அன்னிய நாடு பறந்து போய் விடுவென்

**பெண்காகம்:-** நீயும் மனிதனைப் பார்த்து கெட்டுப் போனாய்.

---

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
சண்டிக்குளி கிளை நூலகம்.

# நேயம் நயந்தவை

ஆசிரியருக்கு,

ஐயா, நீண்ட வரலாற்றை சுருக்கி நிலைக் கண்ணாடி எழுதியதைப் பாராட்டுகிறேன். பிரேமதாசா பாயாசமாகப் பேசி பாஷாண மாக நடந்துகொண்டார். டிங்கிரி பூநகரி ஸ்தலத்தில் செந்நீர்த் தீர்த்தம் ஆடி ஆயுதத் தானம் செய்து உள்ளொளி பெற்றார் என்ற வரிகள் உங்களுக்கே உரிய கிண்டல் பேச்சு, வாழ்க உங்கள் நகைச்சுவை.

சி. தமிழரசன் புலோலி

அகராதி அருமை, சிறுகதை இல்லாதது பெரும் குறை. கதைத்தேன், கதைமணி நன்று. ஆனால் எங்கள் யானைப்பசிக்கு சோளப் பொரி போட்டது போல இருந்தது. ஏன் சிறு கதைக்குப் பஞ்சமா?

வீ. மாலதி கரவெட்டி

சிரித்திரன் பாகாய் இனிக்கிறது. ஆனால் விஷயம் போதாது. மினி மிட்டாய் மாதிரி இருக்கிறது.

சு. மங்கயற்கரசி வட்டுக்கோட்டை

சிரித்திரன் இம்முறை சுவாமி மஞ்சள் சாத் துப்படியில் ஊர்வலம் வருவதுபோல இருந் தது. முன் முறுவல் முதல் பின் முறுவல் வரை ரசித்தேன். விஷயதானத்தைக் கூட்ட வேண்டு கிறேன்.

வ. மனோகரன் மல்லாகம்

சிக்கல் போட்டியைத் தொடரவும்; நல்ல பொழுதுபோக்கு. என்னுடைய பாட்டனார் கூட சிக்கல் சிக்கலெனப் பொச்சடிக்கிறார்.

ந. வஸந்தன் சாவகச்சேரி

எமது அரசியல் பார்வை குருடா? என்ற கேள்விக்கு நீங்கள் கொடுத்த பதில் எல்லோரை யும் சிந்திக்க வைத்திருக்கும். மெயில் வாகனத் தார் கதிரையில் இருந்தபடி எம்மை எங் கெங்கோ அழைத்துச்செல்கிறார். சொல்லட் டும் கேட்கிறோம் சுவாரஸ்யமாக இருக்கிறது. ''பலரசம்'' போன்று புதுப் புது அம்சங்களை சேர்த்து எம்மை மகிழ்வியுங்கள். சிரித்திரன் வாழ்க, வளர்க என வாழ்த்துகிறோம்.

மகேஸ். மார்க்கண்டு வரவன் மானிப்பாய்

மின்சாரம் இல்லை, கொப்பி இல்லை படி படி என்று பெற்றோர் கூறுகிறார்களே நான் இச் சூழ்நிலையில் என்ன செய்வது? டிங்கிரி, எப்போ கருணை காட்டுவார்.

த. சேனாதிராஜா கொக்குவில்

எனது அண்ணா என்னை கனடா வரும் படி எழுதுகிறார். ஆனால் எனது பூமி ஈர்ப்புச் சக்தி என்னை விடுகுது இல்லை.

க. ஆனந்தன் கரவெட்டி

நாட்டு நிலைமை உணராது கீழ்த்தர மான தென் இந்திய சினிமாப்படங்களை விடிய விடிய வீடியோவில் பார்ப்பவர்களை நினைத்து அழுவதா? சிரிப்பதா? என்று தெரியவில்லை.

இ. முகுந்தன் வண்ணார்பண்ணை

வீதி ஒழுங்கையில் போத்தில் ஓடுகளை ஒழுங்காகப் போடும் ஒழுக்கமில்லாத நாடு எம்நாடு. என்றுதான் ஒழுங்கையை துப்பரவாக வைத்திருப்பார் எம் மக்கள் என்று தெரிய வில்லை.

சி.பரமகுரு யாழ்ப்பாணம்

கலப்படம் ஒருபக்கம், இலையான் ஒரு பக் கம், நுளம்பு மறுபக்கம் அப்பாடா இதை யாரி டம் சொல்வது. சுற்றாடல் சூழல் பாதுகாப்பு காலத்திலுமா இந்தத்தொல்லை!

ஏ.மரியதாஸ் கொழும்புத்துறை

குண்டு போடும் பொழுதா திருடர் தம் கைவரிசையைக் காட்டுவது? திருடர்கொட்டம் இன்னும் அடங்கவில்லையே.

சைக்கிள் களவு கொடுத்த ஒரு மாணவி

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
கண்டிக்குளி கிளை நூலகம்.

# மருந்துக்கும் தட்டுப்பாடு மருத்துவத்துக்கும் தட்டுப்பாடு

## நிலைக்கண்ணாடி

உலகம் எனும் பெரிய பம்பரத்தில் மனிதன் ஒரு சிறிய பம்பரம். மனிதனாகிய சிறிய பம்பரம் தனது சுழற்சிவிசை முடிந்ததும் நின்றுவிடுகின்றது. விதி எனும் வேலி எல்லைக்குள்தான் இந்த வேகம் எல்லாம். அதுவரை மருத்துவன் ரோகமின்றி ஆரோக்கியமாக இயங்கச் செய்கின்றான்.

நோயாளியின் நாடி பிடித்துப் பார்ப்பதே அவர்கள் நாடுவதெல்லாம். விழிப்பாக இருந்து தமது மருத்துவ விஞ்ஞான அறிவை எல்லாம் நெம்பு கோலாகப் பாவித்து நோயாளியை கட்டிலில் இருந்து எழுப்பி விடுவதே அவரின் இலட்சியம். இதன் காரணமாகவே மக்கள் அவருக்கு மதிப்பு மரியாதையெல்லாம் வழங்குகிறார்கள்.

இன்று நாட்டில் மருந்து இல்லை. பின் தங்கிய மாவட்டங்களில் மருத்துவர் மருந்துக்குக்கூட இல்லை.

மருத்துவ நிபுணர் சிலர் படையினரின் நையப்புடைப்புக்கு அஞ்சி அந்நியநாடு போயுள்ளனர். சிலர் யுத்தமுகிலின் குண்டு மழைக்குப் பயந்து போயிருக்கிறார்கள். இன்னும் சிலர் அந்நிய நாட்டு காசோலை நிழலில் சுகம் காணப் போயிருக்கிறார்கள்.

தினப் பத்திரிகைகள் தினமும் மருத்துவர் பற்றாக்குறை பற்றி பிலாக்கணம் பாடுகின்றன. நோயாளிகள் மருத்துவர் கண்காணிப்பு இல்லாமல் அநாதரவாய் இறக்கின்றனர். பணம் படைத்த பாக்கியவான்கள் நோய்க்கு பரிகாரம் செய்வதற்கு அந்நியநாடு போகிறார்கள். ஏழைகள் ராணுவத்துடனும் நோயுடனும் வறுமையுடனும் மும்முனைப் போராட்டம் நடத்தவேண்டி இருக்கின்றது. மாணவர்கள் மருத்துவக் கல்வியில் சித்தியடைந்தும் சிறகடித்துப் பணிபுரிய அந்நியநாடு பறக்கின்றனர். மிகச் சிலர் எமது மருத்துவப்பணி எங்கள் நாட்டில் தேவைஎன தங்கிவிடுகின்றனர்.

யுத்த முகில் கலைவதாக இல்லை. கறுத்துக் கொண்டே போகின்றது. ஒவ்வொரு தன்மானமுள்ள தமிழன் தன் தாய் நாட்டைக் காப்பாற்ற முன்வர வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் தனது சந்ததியினருக்கு விட்டு விட்டுப் போகும் பெரும் செல்வம் வீடு, கன்று, மாடு, தனமல்ல பூரண சுதந்திர பூமியேதான். நாடு விடுதலைபெற நாம் நம்மை தியாகதீபமாக்கிக் கொள்ள வேண்டும். எங்கே சுதந்திரம் நிலவுகிறதோ அதுவே எனது தாய் நாடு என்று பாடினான் ஒரு வீரக்கவிஞன்.

எமது மருத்துவர் அருகாமையில் இல்லையே நோயை மாற்றுவதற்கு என்று நோயாளிகள் கண்ணீர் வடிப்பது தவிர்க்க முடியாததுதான். இந்நிலையில் ஒரு கருத்தோவியம் நினைவில் நிழலாடுகிறது. ஒரு வயோதிபர் தனது வயோதிப மனைவியைத் தோளில் சுமந்து வெள்ளத்தைக் கடக்கிறார் அப்போது அம்மாது, "எமது எஞ்ஜினியர் மகன் அந்நிய நாட்டில் இருந்து எப்போ வருவான்" எனக் கேட்கிறாள். அவன் அந்நியநாட்டு வெள்ளத்திற்கு அணைகட்டிய பின் வருவான்" என வயோதிபர் கூறுகிறார். எமது மருத்துவர்களும் அந்நிய நாட்டு மருத்துவசேவை முடிய எமது மண்ணிற்கு வருவார்கள்!



பொதுசன நூலகம் யாழ்ப்...

# சிலேடைச் சிரிப்பு

## நீரே காலில் விழுந்தால்

கம்பரும் சோழமன்னரும் வழக்கம் போல் மாலை நேரத்தில் சோலையில் உலாவிக் கொண்டிருந்தனர். ஓடிக்கொண்டிருந்த ஆற்று நீர் காலில் படும்படியாக இருவரும் நடந்துகொண்டிருந்தனர்.

நீர் வேட்கை கொண்ட கம்பர் அந்த ஆற்றின் தெள்ளிய நீரை அள்ளிக் குடித்தார்.

இதைக் கண்ட மன்னர் கம்பரை மட்டம் தட்ட விரும்பி கம்பரே! என்காலில் விழுந்த நீரைத்தானே உண்டீர்? என்று கிண்டலாகக் கேட்டார்.

உடனே அதற்குக் கம்பர் "நீரே காலில் விழுந்தால் நான் என்ன செய்வது!" என்று பதிலடி தந்தார்.

### தாசி பொன்னிக்குக் கம்பன் அடிமை

தன்னை அவமானப்படுத்திய கம்பரை எப்படியேனும் பதிலுக்கு அவமானப்படுத்த வேண்டும் என்று நினைத்தார் சோழமன்னர். தம் உள்ளக்கருத்தைப் பேரழகியும் விலைமகளுமான பொன்னி என்பவளிடம் தெரிவித்தார்.

அதற்கு அவள் "நீங்கள் இது குறித்துக் கவலைப்படாதீர்கள். நான் அந்தக் கம்பரின் கையினாலேயே, அவர் எனக்கு அடிமை என்று எழுதி வாங்கி விடுகிறேன்" என்று உறுதியாகச் சொன்னாள்.

அன்று மாலை வீதி வழியாகப் பல்லக்கில் வந்துகொண்டிருந்த கம்பரைச்சந்தித்தாள், பொன்னியின் வேலைக்காரி. அவரிடம் "எங்கள் பொன்னியம்மா தங்களை உடனே அழைத்து வரும்படி கூறினார்கள்" என்று சொன்னாள்.

கம்பர் பொன்னியின் வீட்டுக்குச் சென்றார். அவரை அன்புடன் வரவேற்ற பொன்னி கம்பரைக் கட்டித் தழுவ முற்பட்டாள். இதைப் பார்த்ததும் கம்பர் நடுங்கிவிட்டார். பெண்ணே? நீ அரசர்க்கு உரியவள் உன்னை யான் தீண்டுவதும் குற்றம் என்றார்.

அவள் எதையும் பொருட்படுத்தாமல் கம்பரை அணைக்க அருகில் வந்தாள். கம்பர் கையெடுத்துக் கும்பிட்டு "இதைத் தவிர நீ என்ன சொன்னாலும் செய்கிறேன்" என்று கெஞ்சினார்.

"அப்படியானால் தாசி பொன்னிக்குக் கம்பன் அடிமை" என்று ஓலை எழுதித் தாருங்கள் என்று கேட்டாள்.

அப்படியே கம்பரும் ஓலை எழுதித் தந்து விட்டுத் தன் வீடு திரும்பினார்.

அந்த ஓலையை எடுத்துச் சென்ற பொன்னி அதை மன்னரிடம் தந்தாள் அதைக் கண்ட மன்னர் பெருமகிழ்ச்சி அடைந்தார்.

மறுநாள் அரசவை கூடிற்று. அங்கு வந்த கம்பரை பார்த்து மன்னர், "இந்த ஓலை நீர் எழுதித் தந்ததுதானா?" என்று கேட்டார்.

எந்தச் சூழலையும் தம் அறிவுத் திறமையால் மாற்றி அமைத்து விடக்கூடிய ஆற்றல் வாய்ந்த கம்பர் 'ஆமாம்' என்று விடை தந்தார்.

இதைக் கேட்ட அரசர் உடனே ஓலை படிப்பவனை அழைத்து "இதில் உள்ளதை எல்லோரும் கேட்கும்படி, படி" என்று கட்டளை இட்டார்.

அவனும் அதில் உள்ளதை உரக்கப் படித்தான். இதைக் கேட்டுக் கம்பர் அவமானத்தால் கூனிக் குறுகுவார் என்று எதிர்பார்த்த மன்னர் ஏமாற்றம் அடைந்தார். கம்பரோ எதுவும் நடவாததுபோலச் சிரித்த முகத்துடன் காட்சி அளித்தார்.

எரிச்சலுற்ற மன்னர் கம்பரைக் கேலி செய்ய விரும்பி "தாசி பொன்னிக்குக் கம்பரே நீர் அடிமைதானா?" என்று கேட்டார்.

"அதற்கு ஐயமென்ன?" என்றார் கம்பர். பார் புகழும் புலவராகிய நீர் கேவலம் ஒரு, தாசிக்கு அடிமை என்று எழுதித் தந்துள்ளீரே. உமக்கே வெட்கமாக இல்லையா?" என்று ஏளனமாகக் கேட்டார் மன்னர்.

அதற்குக் கம்பர், "நான் ஏன் வெட்கப்பட வேண்டும்? அதற்காகப் பெருமையல்லவா

தொடர்ச்சி 7ஆம் பக்கம்



# மகுடி

ஆரணிநல்லநாதன். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

கேள்வி:- சனசமூக நிலையத்தில் பத்திரிகை திருடுபவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்.

பதில்:- பத்திரிகையில் திருடுவது பஞ்சமா பாதகம் என்ற கட்டுரை இருக்கிறது போலும்.

இக் கேள்விக்கான பரிசை மில்க்வைற் உரிமையாளர் கலாநிதி க. கனகராசா அவர்கள் வழங்குவார்கள்.

பி.பிரகாஷ் வட்டுக்கோட்டை.

கேள்வி:- டிங்கிரி பண்டாவுக்கு பீ துரு தாலகாலவிலிருந்து தண்ணீ வருகுதாமே?

பதில்:- அவருக்கு பாரீசிலிருந்தும் "தண்ணி" வரும்!

வே. பவதாரணன் உடுப்பிட்டி

கேள்வி:- வடக்கில் இராணுவத் தோல்விகள் ஏற்படும் போதெல்லாம் தெற்கில் சிங்கள அரசியல்வாதிகள் கிரிக்கட் ஆடுகிறார்களே.

பதில்:- வடக்கில் "போல்ட்" தெற்கிலாவது "சிக்ஸர்" அடிக்கட்டும்!

க.ரஜனி கரவெட்டி.

கேள்வி:- தமிழர் உரிமை மறுக்கப்பட்டதால் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர் என்கிறார் ஸ்ரீமாவோ.

பதில்:- இது போதிமர அடியில் தோன்றவில்லை, பூநகரி அடியில் தோன்றிய ஞானம்.

மு. சிவமணி நல்லூர்.

கேள்வி:- கண்ணீர்தான் வாழ்வு என்றால் ஆவதென்ன?

பதில்:- கண்ணீரை ஆணி முத்தாக்க வேண்டும்.

ம. மீரா கரவெட்டி.

கேள்வி:- எது இனிமை ? எது வன்மை?

பதில்:- இசைவித்துவானின் குரல் இனிமை. குரட்டை வன்மை.

வி. ஆனந்தன் ஆனைக்கோட்டை.

கேள்வி:- மக்களின் இதயத்தை வெல்வது (கவர்வது) எப்படி?

பதில்:- அவர்கள் விருப்பம் பூவாக விரிய நீர் ஊற்ற வேண்டும்.

திரவியம். சதிஸ் கைதடி.

கேள்வி:- இம்மண்ணில் உயர்வு தாழ்வு பார்ப்போர் பற்றி என்ன நினைக்கிறீர் மகுடியாரே?

பதில்:- கடைத்தராசுபோல தமிழீழ சமூகத் தராசு நர்த்தனமாடுவதில்லை.

ம. வதனா மானிப்பாய்.

கேள்வி:- தாய்மை தெய்வீகமானது: தாய்க்குலத்தை அடிமைப்படுத்த விரும்புபவன் பற்றி?

பதில்:- உளக்குஷ்டரோகி.

சுந்தரி நீர்வேலி.

கேள்வி:- வாழ்க்கையில் வளம்பெற என்ன செய்ய வேண்டும்.

பதில்:- நம்பிக்கையெனும் கற்பகதரு எல்லாந் தரும்.

சாமேந்திரன் நல்லூர்.

கேள்வி:- கலையுள்ளம் எப்படிக் கலை படைக்கிறது.

பதில்:- காவியம், ஓவியம், இசை எல்லாம் மனோதர்ம தேனூற்றே.

சித்தரஞ்சன் ஆவரங்கால்.

கேள்வி: வீடுகளுக்குப் போனால் பெற்றோர் பெருமூச்சுவிட்டு மூக்குச் சிந்துகிறார்களே?

பதில்:- பிள்ளைகள் நாலுதிக்கிலும், தாங்கள் திக்கற்றவர்கள் என்பதால்தான்.



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

சி.சங்கீதா நல்லூர்

கேள்வி:- யாழ்ப்பாண இருட்டில் எங்கள் நிலை.?

பதில்:- ஆகாயத்தில் விளக்குகள் எரிகின்றன. அகத்திலோ குத்துவிளக்கும் எரிவதில்லை.

ரஞ்சிதம் உடுப்பிட்டி.

கேள்வி:- குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன். இருந்தும் குரங்கு அஃறிணை: மனிதன் உயர்திணை ஏன்?

பதில்:- குரங்குக்கு குறிக்கோளில்லை. மனிதனுக்கு உண்டு.

எஸ். ஞானேஸ்வரன் தொண்டமனாறு.

கேள்வி:- பரீட்சையில் குதிரையோடுபவர்களைப் பற்றி?

பதில்:- தம்பிக்கு மூளை குதிரைக் கொம்பு.

ஜெ. ஜெயக்குமார் திருநெல்வேலி.

கேள்வி:- போர் எப்போது நிற்கும்?

பதில்:- பேரினவாதம் இருக்கும் வரை துப்பாக்கிகள் தும்மிக்கொண்டேயிருக்கும்.

ச. திருமகள் கோண்டாவில்.

கேள்வி:- தற்காலம் பொற்காலம் என்கின்றேன்?

பதில்:- கவிதை தங்கரத ஊர்வலம் வரும் காலம்.

கபிலன் நல்லூர்.

கேள்வி:- நகை இரவல் வாங்கினால் திருப்பிக் கொடுக்கிறார்கள். ஆனால் புத்தகங்களை வாங்கினால் திருப்பிக்கொடுப்பதில்லை?

பதில்:- நகைக்குத் திருடர் பயம் இருக்கும். புத்தகத்தைத் திருட யார் வருவார்கள்.

சி. சூரியகுமாரி மானிப்பாய்.

கேள்வி:- மதகுருக்கள் துட்டகைமுனு, பராக்கிரம பாகுவை நீண்ட தூக்கத்தில் இருந்து எழுப்புகிறார்களே?

பதில்:- அவர்களுக்கு எமது ஒவ்வொரு போராளியும் நெப்போலியன் என்று தெரியாது போலும்.

ச. ரஞ்சிதரூபி அக்கராயன் ம.வி.

கேள்வி:- இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன என்று நினைக்கிறவர்கள் பற்றி?.

பதில்:- திரிசங்கு சொர்க்க திருவாளர்கள்.

க. கருணை நீர்வேலி.

கேள்வி:- நீரும் நானும் துறவியாய் போவோம் வருகிறீரா?

பதில்:- முதல் உம் திறப்பை என்னிடம் தாரும், பின் துறப்பைப்பற்றி யோசிப்போம்.

ம. விதுரன் புலோலி.

கேள்வி:- ஒருவன் எப்போது வெற்றிவாகை சூடுவான்?

பதில்:- நிழல் போல் திரியும் எட்டப்பனையும் வெற்றி கொள்ளும்போது.

கேள்வி:- சீதனக் கொடுமையை ஒழிப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

பதில்:- அன்பு என்னும் அறிவியல் ஞானம் கனிய வேண்டும்.

க. முகுந்தன் கரவெட்டி

கேள்வி:- கோடி கோடியாய்க் கொடுத்து ஆயுதக் கொள்வனவு செய்தார்களே?

பதில்:- கோடிகொடுத்து கொள்வனவு செய்தும் ஆயுதம் எம் கோடியில்.

குமுதினி நல்லூர்.

கேள்வி:- அசோகச்சக்கரவர்த்தி இன்று உயிருடன் வந்து பெளத்த மகாசங்கங்களைச் சந்தித்தால்?

பதில்:- பெளத்த மதம் மகாசங்கத்தினருக்குப் புரியவில்லையே என்று கவலையில் துறவியாகப் போவார்.

மதிவதனி ஆவரங்கால்.

கேள்வி:- இன்றைய தமிழன் கோலாகலமாக பிறந்த தினம் கொண்டாடுவது பற்றி என்ன நினைக்கிறீர்?

பதில்:- அடிமைத் தமிழன் விலங்குடன் கேக் வெட்டுவது?

கேள்வி:- விளம்பரம் விரும்புவோர் முன்னேற முடியுமா?

பதில்:- முத்தின் முழு உருவாக்கம் மறைவிடமல்லவா!

க. முகுந்தன் நீர்வேலி.

கேள்வி:- கிழக்கில் தேர்தல் பற்றி?

பதில்:- ஓ ஜனநாயகமே! உன் முகமூடியிலா இந்த அடாத்தும் காடாத்தும்.

ப. சீதாமேகர் நல்லூர்,

கேள்வி:- தமிழ் மக்களுக்கு இன்னும் சுதந்திர உணர்வு வரவில்லையே!

பதில்:- அவர்கள் காலால் இட்டதை தலையால் செய்ய காத்திருக்கிறார்கள்.

க.ஞானசேகரம் புத்தூர்.

கேள்வி:- பதவிமோகம் எப்படிப்பட்டது?

பதில்:- தாய் குறுக்கே நின்றாலும் எதிரியுடனும் சேருவான்.

S.மஞ்சுளா கரவெட்டி.
கேள்வி:- என் விழிகள் உண்மை மனிதனை தேடு கின்றது. நீங்கள் எப்போதாவது உண்மை மனிதனைக் கண்டதுண்டா?

பதில்:- புளுகில் சந்தித்திருக்கிறேன். புளுதியில் சந்திக்க வில்லை.

திருமதி தியாகராசா ஸ்கந்தபுரம்.
கேள்வி:- வெளிநாட்டில் அடிமையாக இருந்து இங்கு வந்து பெருமைகாட்டுகிறார்களே?

பதில்:- தோகை விரித்து ஆடினாலும் அடிமைதான் காலில் அடிமைச்சங்கிலி தான் குலுங்குகிறது.

தி.உதயா ஸ்கந்தபுரம்
கேள்வி:- கூலியாளரை வதைத்து பணம் திரட்டி கோயில்களுக்கு கொடுக்கிறார்களே?

பதில்:- ஆண்டவன் குருடா! அது ஆண்டவனுக்கு தெரியும்.

தி.ஞானச்சந்திரன் அக்கராயன் ம. வி.
கேள்வி:- நிறுவைத்தராசில் பொருளை குறைக்கிறார் களே?

பதில்: தராசு நர்த்தனம் ஆடும் பொழுது, எப்படி குறையாது இருக்கும். கடைக்காரர் நட்டுவாங் கத்தில் கைதேர்ந்தவர்கள்.

## சிலேடைச் சிரிப்பு

[4 ஆம் பக்கத் தொடர்ச்சி]

படவேண்டும். அதன் உண்மைப் பொருளை அறிந்தால் நீங்களும் என்னைப் பாராட்டு வீர்கள்'' என்றார்.

கடுகடுப்புற்ற மன்னர் ''அந்தத் தொடர், வேறு என்ன பொருளைத் தருகிறது?'' என் றார்.

''மன்னா! 'தா' தாயாகிய 'சி' அழகிய பொன்னிக்குத் திருமகளுக்குக் கம்பனாகிய யான் அடிமை என்று எழுதினேன்'' என்று விளக்கம் தந்தார்.

கம்பரை அவமானப்படுத்தத் தாம் செய்த முயற்சி தோல்வி அடைந்ததைக் கண்டு மன்னர் தலை கவிழ்ந்தார்.

### கன்னா பின்னா மன்னா தென்னா

தம்மைப் புகழ்ந்து பாடும் புலவர்களுக் கெல்லாம் அரசர் பெரும் பொருளைப் பரிசாகத் தருகிறார் என்று கேள்விப்பட்டான் ஏழை உழவன் ஒருவன்.

அறிவில்லாதவனாகிய அவன் தன் உள் ளத்திற்குத் தோன்றியதை எல்லாம் பாடலாக எழுதிக்கொண்டு அரசசபைக்கு வந்தான்; புலவர்கள் வரிசையில் அமர்ந்தான்.

அவன் முறை வந்ததும் அரசரை வணங்கி கன்னா பின்னா மன்னா தென்னா என்று தான் எழுதிவந்த பாடலைப் படிக்கத் தொடங்கினான்.

இதைக் கேட்டு சபையில் இருந்தோர் அனைவரும் சிரித்துவிட்டார்கள். அவனுடைய உளறலைக் கேட்டு அரசரும் கோபத்துடன் பாட்டை நிறுத்து' என்று கூச்சல் இட்டார்.

நடந்த நிகழ்ச்சிகளைக் கண்டு உழவனும் தனக்கு என்ன தண்டனை கிடைக்குமோ என்று நடுங்கிவிட்டான்.

சபையில் இருந்த கம்பர் எப்படியும் இவனைக் காப்பாற்ற வேண்டும் என்று நினைத்தார். தன் இருக்கையை விட்டு எழுந்து '' ஆ! என்ன அருமையான பாடல். நம் அரசரை இது வரை இவ்வளவு அழகாகப் புகழ்ந்து பாடியவர் யாரும் இல்லை'' என்றார்.

வேறொரு புலவர் எழுந்து ''கம்பரே! அவன் உளறலைப் பாடலென்றும் அதில் ஏதோ அழகிருக்கிறதென்றும் சொல்கிறீர். அதை விளக்கிச் சொன்னால் நாங்களும் சுவைக்கலாமே'' என்றார்.

கம்பர் விளக்கம் சொல்லத் தொடங் கினார். கன்னா என்றால் கர்ணன் என்றும் பின்னா என்றால் பின்னவனே என்றும் மன்னா என்றால் அரசனே என்றும் தென்னா என் றால் தென்னாட்டின் தலைவா என்றும் பொரு ளாகும். அதாவது கர்ணனுக்குப் பிறகு எல் லோராலும் வள்ளல் என்று போற்றிப்புகழைப் பெறுபவர் தென்னாட்டை ஆளும் நம் மன் னரே என்பது இதன் பொருளாகும்'' என்றார்

இதைக் கேட்ட அரசரும் அவையினரும் கம்பரைப் புகழ்ந்தார்கள்.


மகிழ்ந்த அரசர் உழவனுக்குப் பெரும் பொருள் பரிசாகத் தந்தார்.

★ சிரிக்க சிந்திக்க சிலேடைகள் என்ற புத்தகத்திலிருந்து.



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
சண்டிக்குளி கிளை நூலகம்.

# மெயில்வாகனத்தாரின் மனோரதம்



வேப்பமர மான்மியம்

சுங்க இலாகாவிற்குச் சமர்ப் பிக்க வேண்டிய சகல பத்தி ரங்களும் இல்லாமையால் நான் இந்தியாவிலிருந்து இலங்கை நுழையமுடியாது என மண்டபம் காம்பில் ஒரு வாரம் தண்டனையாகத் தடுத்து வைக்கப்பட்டேன். மண்டபம் காம்ப் என்றவு டன் என் மண்டை வெந்தது. மண்டபம் காம்ப் ஒரு அனல் மணல்ப் பிரதேசத்தில் அமைந் திருக்கிறது. அங்கு நான் ஒரு வாரம் தங்கவேணும் என்ற தும் மனம் தகித்தது. இருந் தும் நான் அங்கு போய் ஒரு விடுதியொன்றில் தங்கினேன். இரவு முழுவதும் நித்திரா தேவி என்பக்கம் வரவில்லை. வியர்வை வெள்ளமாக வடிந் தது. வியர்வை வெள்ளத்தில் புரண்டேன். விடிந்ததும் வேலை ஆள் ஒரு கப் காப்பி கொண்டுவந்து வைத்தார். பின்பு ஒரு அரச ஆபிசர் அங்குவந்து வேப்பந்தளிர் கொய்தார். "ஏன் வேப் பந்தளிர் கொய்யிறீர்" எனக் கேட்டேன். 'வேப்பம் தளிர்ச்சாறுதான் நான் காலை பருகுவது. அது என்னை ஆரோக்கியமாக வைத் திருக்கும் ஔடதம்; டிகா ஷன் காப்பி அல்ல' என்றார். நான் என் அருகாமையிலி ருந்த காப்பியைப்பார்த்து காற்றுப்போன பலூனாகச் சுருங்கினேன்.

அவர் வேப்பமரத்தின் நிவாரண மகத்துவத்தைப் பற்றி கரும்பான கதையும் கூறினார். ஒருவர் தூர தேசத் திற்கு ஏதோ காரணமாகப் போக வேண்டிஇருந்தது. அவர் அந்தத்தேசம் போன தும் நோய் அவரைப் பீடித் தது. ஒரு ஆயுள்வேத வைத் தியரிடம் போனார். அவர் கைநாடி பிடித்துப் பார்த்து விட்டு நோயாளியை "நீர் இந்த ஊர் வரும்போது வழி யில் புளியமரத்தின் கீழா தங்கி வந்தீர் எனக் கேட்டார் நோயாளியும் 'ஓம்' எனப்பதில் கூறினான். வைத்தியர் "நீர் இம்முறை ஊர் திரும்புகையில் வேப்பமர நிழலில் தங்கிப் போகவும்" எனக் கூறினார். அவனும் அவ்வண்ணமே செய்து தனது நோயை மாற் றிக் கொண்டான் எனக் கூறி னார்.

"அதுசரி... ... நான் தங்கி யிருக்கும் விடுதியின் அறை குளிர் ஊட்டப்பட்டதா?" எனக்கேட்டேன் இல்லைசார் மண்டபம் 'காம்ப்' வேப்பமரச் சோலையின் கீழ் அமைந்தி ருக்கிறது. சூரியனின் வடிவம் வட்டமா! சதுரமா! என்று இங்குள்ள மணலுக்குத்தெரி யாது" என முறுவலித்துக் கூறி என்னிடம் விடைபெற் றார்.

அவர் போன பின்பு வேப்பமரத்தின் ஆணிவேரிலி ருந்து குருத்து மட்டும் கற்பனை பண்ணினேன் அது முழுவதும் மூலிகை என உணர்ந்தேன். இன்றைய மேல்நாட்டு மருத்துவ விஞ் ஞானிகள்கூட வேப்பமரத்தின் மூலிகையின் மகோன்னத தன் மையை உணர்ந்துள்ளார்கள்.

யாழ்ப்பாண சுற்றா டலை யுத்தம் மாசுபடுத்திக் கொண்டிருக்கிறது. வீடுகளும் கோயில்களும் இவ் அரும் பெரும் ஆரோக்கிய விருட் சத்தின்கீழ் அமைந்துள்ளன. மண்ணைக் காப்பாற்றுவ தற்கு இந்த மூலிகை மரத் தைக் காப்பாற்றுவோமாக.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
கண்டிக்குளி கிளை நூலகம்

# பலரசம்

சீன ஓவியர்கள் இயற்கையை அப்படியே வரைவதில்லை. இயற்கையைத் தியானித்து தியானத்தில் தோன்றிய காட்சியையே வரைவார்கள்- அத்தோடு ஓவியத்தின் ஓரத்தில் ஓர் கவிதையும் எழுதப்பட்டுஇருக்கும். இவர்களை ஓவியப் புலவர்களென அழைப்பார்கள்.

அன்று நான்கு பெண்மணிகள் இசைச் சோலையில் பூங்குயிலாகப் பாட்டிசைத்தார்கள். பட்டம்மாள், சுப்புலக்ஷ்மி, வசந்தகோகிலம், வசந்தகுமாரி என்பவர்களாம். அன்று இசைச் சோலை அவர்களது கானத்தினால் சோபித்தது.

வறுமை தாங்கமுடியாது மகன் தன் தாயைக் குப்பைத்தொட்டியில் போட நேர்ந்தது. இதை, மேரி தெரேசா அம்மையார் பார்க்க நேர்ந்தது. அன்பும் ஆதரவும் வழங்கி அந்த பெண்ணைத் தன்மடத்தில் தெரேசா கொண்டு போய்ச் சேர்த்தார் ''ஒருவரை மரணத்திலிருந்து தான் காப்பாற்ற முடியாது; ஆனால் அன்பினால் வாழவைக்க முடியாதா''? என்று மேரி தெரேசா கூறினார்.

கூனிக்கொண்டு முகத்தைத் தொங்கவிட்டுச் செல்பவரை முதுகில்தட்டிப் 'பாண்டியா நீ கூன் பாண்டியன் ஆயினையோ' என்று எடுத்துக்கூறி புத்தி புகல்வாராம் பாரதியார். ஆம் பாரதியின் வடிவமும் தோற்றமும் வாழ்க்கைக்கு எடுத்துக் காட்டுத்தான்.

லியனார்டோடாவின்சி வரைந்த 'இராப்போசனம்' ஓவியம் உலகை பிரமிக்க வைத்தது. அவர் வரைந்த மொனாலிசாவைப் பாடாத கவிஞரே இல்லை என்று கூறலாம்.

ஹொலிவூட் நடிகை மெர்லின் மன்றோ ஒரு பேரழகி. புகழ் பூத்த நடிகை. செல்வம், புகழ் நிறைய இருந்தும் அவளை, தான் ஒரு அனாதை என்ற உணர்வு வாட்டியது. கிறிஸ்மஸ்சின் போது ஒரு வேலைக்காரச் சிறுமி அவளுக்கு அன்பளிப்புச் செய்த தோடம்பழம்தான் அவளின் நினைவிலே என்றுமிருந்தது. இறுதியில் அவள் விரக்தியால் தற்கொலை செய்து கொண்டாள்.

அக்பரின் மாளிகையில் அன்று 'தான்சென் என்ற ஒரு பாடகர் இருந்தார். அவரை ஒருமுறை 'தீபக்இராகம்' பாடக் கேட்டார்கள். அவர் பாடியபோது தீ மூண்டது. உடனே, அவர் 'அமிர்தவர்ஷினி' இராகம் பாடி தீயை அணைத்துக் கொண்டாராம்.

கலாயோகி ஆனந்தக்குமாரசாமியை மேலை நாட்டவர் ஒருவர் சுயசரிதை எழுதினால் என்ன? என வினவினார். அதற்கு கலாயோகி, ''நான் ஒரு இந்துவாக வாழ்ந்தவன். இந்துமதம் 'நான்' என்ற அகங்கார சொல்லை அழிக்கும் தத்துவம் உடையது. 'நான்' 'எனது' சுயசரிதையை எழுதுவது இந்து மதத்திற்குப் புறம்பானது'' எனக்கூறினார்.

'மன்னம்பெரி' ஒரு சேகுவேரா போராட்ட வீராங்கனை. இராணுவத்தால்கைது செய்யப்பட்ட அவள் ஆறடி நீளமான குழியை வெட்டுமாறு இராணுவத்தால் பணிக்கப்பட்டாள் தனது முடிவை உணர்ந்து கொண்ட அவள், தன் ஆபரணங்களைச் சகோதரியிடம் ஒப்படைத்தாள். பின்னர், தான் வெட்டிய குழிக்குள்ளேயே நிர்வாணமாக நிற்கவிடப்பட்டு இராணுவத்தாலேயே சுட்டுக் கொல்லப்பட்டாள். அவளுடைய நிர்வாணத்தை குருதித் திரையே மூடிக் கொண்டது.

## மன்னன் மதித்த சிற்பக்கலை

சிற்பி சிலைவடிப்பதில் மெய் மறந்திருந்தான். அவன் தாம்பூல எச்சில் உமிழுவதை ஏந்துவதற்கு உதவியாளன் காத்திருப்பான். அந்நேரம் உதவியாளன் அங்கு இருக்கவில்லை. அப்பொழுது மன்னன் அவ்வழி வந்தான். சிற்பி தாம்பூல எச்சில் உமிழப்போவதை உணர்ந்து குவளையை ஏந்தினான். சிலை வடிப்பதில் தியானமாக இருந்த சிற்பிக்கு தன் எச்சில் ஏந்தியது மன்னன் என்று தெரியவில்லை. அந்த ராஜராஜசோழ மன்னனும் சிற்பக்கலையை அன்று பெரிதும் மதித்தான். இது தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலில் நடந்ததாக சரித்திரம் கூறுகிறது.



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
கண்டிக்குளி கிளை நூலகம்.

தானங்கள் போற்றத்தக்கது
நிதானமும் போற்றத்தக்கது
நிதான விலையில் பொருள்களைப் பெற நாடுங்கள்

# சதீஸ் ஸ்ரோர்ஸ்

★ பலசரக்குச் சாமான்கள்
★ பாடசாலை உபகரணங்கள்
★ பத்திரிகை விற்பனையாளர்

நாவற்குழிச் சந்தி — கைதடி

ஒருவர்:- மனைவி அந்நிய நாட்டில், நீ பயில்வான் மாதிரி இருக்கிறியே எப்படி?
மற்றவர்:- சுவையான - சத்தான உணவிற்கு இருக்கவே இருக்கிறது ஆரிய பவான்!

# ஆரிய பவான்

★சைவ உணவகம்★

கைதடிச் சந்தி — கைதடி

சிறுகதை

# கிணற்றுத் தவளை

— மலரன்னை —

குறிப்பு:- 'கிணற்றுத் தவளை' எனும் இச்சிறு கதை எனது சொந்தக் கற்பனையாகும்.

முகவரி:- திருமதி. அ. காசிலிங்கம்.
' மலரகம் '
435, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள,
அ. காசிலிங்கம்.

கரும் புகையென மேகம் அடர்த்தியாய்ப் பரவி நின்று ஆகாயத்தை மறைத்துக்கொண்டிருந்தது. மழை சிணுசிணுவென்று சிணுங்கிக் கொண்டிருந்தது. நிலப் பரப்பெங்கும் வெள்ளம் ஓரே சீராய்ப் பெருகி, ஓடிக் கொண்டிருந்தது. வெள்ளத்துத் தண்ணீரில் மழைத் துளிகள் விழுந்து குமிழ்குமிழாய் வெடித்து மறைந் தன, மரஞ்செடிகள் எல்லாம் ஆசைதீரக் குளித்து விட்ட திருப்தியில் திளைத்துக் கொண்டிருந்தன.

சமயலறையில் இரட்டைச் சூட்டடுப்பின்முன் பம் பரமாய்ச் சுழன்று சமையலில் மூழ்கிப் போயிருந் தாள் சிவகாமி. விறகைச் சிக்கனப்படுத்தி, இரண்டு அடுப்புகளிலும் ஒரே சமயத்தில் சமையலைக் கவனிப் பதென்றால் சுறுசுறுப்பில்லாமல் சமாளிக்க முடியுமா? என்ன!

அடுப்பிலிருந்த உருளைக்கிழங்குக் கறியைக் கிள றியவளின் மனத்தில் ராகவனது நினைவு துளிர்விட் டது. ராகவனுக்கு உருளைக்கிழங்குக் கறியென்றாலே அலாதி பிரியம். 'என்ரை பிள்ளைக்கு அங்கை நல்ல சாப்பாடு கிடைக்குதோ! என்னவோ!' எண் ணத்தின் பிரதிபலிப்பாய் அடிநெஞ்சிலிருந்து நீண்ட ஒரு மூச்சு வெளிப்பட்டது. ம்!.. ...

பின்னால் நிழலாடியது. திரும்பிப்பார்த்தாள். அங்கு சுந்தரம் நின்றுகொண்டிருந்தார். மைதிலி தனது மனத்தின் அங்கலாய்ப்பை வெளிப்படுத்தி னாள்.

"என்னப்பா! தம்பிக்கு நல்ல இடத்திலேயே சாப்பாடு ஒழுங்குபடுத்தி விட்டனீங்கள்?"

"சிவகாமி! இதென்ன கேள்வியப்பா. பிள் ளையைக் கொழும்புக்குக் கூட்டிக்கொண்டு போன நான், எல்லா ஒழுங்குகளும் சீராய்ச் செய்து போட் டுத்தானே வந்திருப்பன். அதோடை, வெள்ளவத்தை யிலை இருக்கிற என்ரை சிநேகிதனிட்டையும் சொல் லிப்போட்டுத்தான் வந்தனான். தம்பியைக் கவனிச் சுக் கொள்ளச் சொல்லி"

"அது சரியப்பா! எனக்கெண்டால் கையுக்கை வைச்சிருந்த பிள்ளையைப் பிரிஞ்சிருக்கிறது பெரிய கஷ்டமாயிருக்குது"

சொல்லும்போதே சிவகாமியின் குரல் கரகரத்தது.

"சிவகாமி! உமக்கென்ன விசரே! அவன் படிச்சு நல்லாய் வாறதை விட்டிட்டு உம்மோடு நெடுக இருக் கேலுமே? அவன் ஒரு டொக்டராய் வாறதிலை உமக்குப் பெருமையில்லையே? ஏதோ ...... நான் கையெடுத்த முருகன்ரை அருளால பிள்ளையும் கெட் டித்தனமாய்ப் பாஸ் பண்ணினான். அதனாலதான் கொழும்புக் கம்பஸில இடம் கிடைச்சுது இல்லாட் டில்......"

"இல்லாட்டில் என்னெண்டு சொல்லுங்கோவன்"

"இஞ்சை அவனை வைச்சிருக்கிற தெண்டால் எனக்கு மடியிலை நெருப்பைக் கட்டி வைச்சிருக்கிறது மாதிரித்தான். அவன்ரை மனத்தை அங்காலை இங் காலை அலைபாய விடாம வைச்சிருக்க நான் பட்ட பாடு. இப்பத்தான் எனக்குக் கொஞ்சம் நிம்மதியாய் இருக்கு"

அவரது நிம்மதியைக் குலைத்தது அவரது மகள் ராஜியின் குரல்.

"அம்மா! இஞ்சை வந்து பாருங்கோ. தம்பி கிணத்துக்கை விளையாடுறான்."

"ஐயோ! மாரிக்கிணறு நிறைஞ்சு கிடக்கு. உவன் பாரதனைஒருக்கால் அறுக்கைப் பண்ணி வையுங்கோ"

சொல்லிக்கொண்டே சிவகாமி கிணற்றை நோக்கி விரைந்தாள். சுந்தரம் பின் தொடர்ந்தார். அப்பா வைக்கண்டதும் ராஜி முறையிட்டாள்.

"அப்பா! இஞ்சை பாருங்கோ தம்பியை, சொல் லச் சொல்லக் கேட்காமல் கிணத்துக்கை வாளியை விட்டுத் தவளையைப் பிடிச்சுக் கொண்டிருக்கிறான்"

பாரதன், இவற்றைப் பொருட்படுத்தாமல் தனது முயற்சியைத் தொடர்ந்துகொண்டிருந்தான். சுந்தரம் மெதுவாகக் கேட்டார்.

"தம்பி பாரதன்! ஏன் ராசா மாரிக் கிணத்தில விளையாடுறாய்?"

"இல்லையப்பா!...... கிணத்துக்கை ஒரு தவளை மேலால மிதந்து கொண்டிருக்கு. அதைநான் வாளிக் குள்ளை பிடிச்சிட்டன், இஞ்சை பாருங்கோ எடுக் கிறன்"



சண்டிலிப்பாய் ... நூலகம்

சொல்லிக்கொண்டே வாளியிலிருந்த நீரைக் கீழே ஊற்றினான். நீருடன் தவளை ஒன்றும் வந்து நிலத்தில் விழுந்தது. பாரதன் பெருமிதத்துடன் நிமிர்ந்து நின்று மற்றவர்களைப் பார்த்துச் சிரித்தான்.

இவற்றைக் கண்ணுற்ற சுந்தரத்தின் மனதில் ஏதோ இனந்தெரியாத புகைச்சல். அவருக்குத் தனது மகன் ராகவனைத் தான் வெளிநடப்புத் தெரியாமல் வீட்டுக்குள் வைத்து வளர்த்த விதமும், இன்று அவனைக் கொழும்பில் கொண்டுபோய் விட்டு வந்திருப்பது, அவனை அந்தரத்தில் தவிக்க விட்டது போன்ற ஒரு மன உலைச்சலை ஏற்படுத்தியது. அவரது அந்தரங்கத்தின் பிரதிபலிப்பை மற்றவர்கள் எங்கே தனது முகத்தில் கண்டு பிடித்து விடுவார்களோ என்ற அச்சம் மேலிட, அன்றைய தினசரிக்குள் முகத்தைப் புதைத்துக் கொண்டார். ஆனால் அவரது மனமோ அமைதியை இழந்து தவித்தது.

மறுநாட்காலை சிறிது தெளிவுடன் கண்விழித்தார் சுந்தரம். கிணற்றடியில் முகங்கழுவிக் கொண்டிருந்தவரின் காதில், ''கீச்! கீச்!'' என்ற சத்தம் கேட்கவே, சத்தம் வந்த திசையைத் திரும்பிப் பார்த்தார். வாய்க்காலுக்குள் புரண்டு கிடந்த தவளையைச் செண்பகம் ஒன்று கொத்திக் குதறிக் கொண்டிருந்தது. அவருக்குச் 'சுரீர்' என்றது ''சூ! சூ!'', என்று செண்பகத்தைக் கலைத்தவர், தவளையை உற்றுப் பார்த்தார். தவளையின் குடல் வெளியே வந்து கிடந்தது.

'உது இனித் தப்பாது' தனக்குள் சொல்லிக் கொண்டவரின் நெஞ்சில் ஒரு முள் தைத்து விட்டாற் போன்ற உணர்வு தோன்றியது. இனம் புரியாத விரக்தி அவரை ஆட்கொண்டது. அப்படியே போய் ஈஸிசேரில் சாய்ந்து கொண்டார்.

அதனையடுத்து, வந்த செய்திகளும் அதைத் தொடர்ந்து அவர் கொழும்பிற்கு ஓடோடிப்போனதும், பொலிசுக்குப் பணம் செலுத்தி மகனை விடுவித்ததும், அந்தன்றே மகனைப்பிரிய நேரிட்டதும், தாங்கொணாத துயரத்தைச் சுமக்கத் தைரியமற்ற கோழையாக அவர் நஞ்சிடம் தஞ்சமடைந்ததும், துரதிஷ்டவசமாக அம்முயற்சியிலிருந்து காப்பாற்றப்பட்டு விட்டதும், எல்லாமே கனவாகப்போய்க் காலமும் ஓராண்டு ஓடி மறைந்து விட்டது. சிவகாமி நடைப் பிணமாகிவிட்டாள்.

சுந்தரம் நோய்வாய்ப்பட்டுப் போனார்! இரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அவருக்கு ஓய்வு தேவைப்பட்டது. அந்தச் சமயத்தில்தான் அவரது தம்பியின் கடிதமும் - கனடாவிலிருந்து வந்தது. அவரையும் குடும்பத்தவரையும் கனடாவிற்கு வந்துவிடும்படி வற்புறுத்தி எழுதியிருந்தார். அவர்களை உடனே புறப்பட்டுக் கொழும்பில் வந்து நிற்கும்படியும் அறிவித்திருந்தார் அவர்.

சுந்தரத்தின் மனம் சிறியதொரு போராட்டத்தின் பின் நிலையான தீர்மானத்திற்கு வந்துவிட்டது. குடும்பத்தவருடன் கொழும்பிற்குப் புறப்பட்டுவிட்டார்.

பாரதனுக்கும் ராஜிக்கும் மகிழ்ச்சி பிடிபடவில்லை. மானசீகமாகக் கனடா போய்வந்தார்கள். சிவகாமிக்கு மீண்டுமொரு தரம் கொழும்பில் ராகவனைத் தேடிப் பார்த்துவிடவேண்டும் என்ற நப்பாசை, எல்லோரும் புறப்பட்டு வந்து கிளாலிக் கடலைக் கடந்துவிட்டனர்.

அன்றைய பொழுது புலரும் வேளை கொட்டும் பனியில் சுந்தரம் குடும்பத்தினர் வவுனியாவுக்குப் போகும் பஸ்ஸிற்காகக் காத்துநின்றனர். அவர்கள் நின்று கொண்டிருந்த கரையோரமாக அவர்களை உரசுமாப்போல் ஒரு வாகனம் வந்து நின்றது. இவர்கள் சற்று ஒதுங்கிக் கொண்டனர்.

அவ் வாகனத்திலிருந்து குதித்து இறங்கினான் ஒருவன். இவர்களை நோக்கி நெருங்கிவந்து, ''அம்மா! எங்கை போக நிக்கிறியள்?'' என்று சிவகாமியைப் பார்த்துக் கேட்டான்,

சிவகாமியின் மேனி ஒரு கணம் புல்லரித்தது. தன் மகனை இனங்கண்டு கொண்ட அப்பேதை அவனைக் கட்டித் தழுவி அழுது தீர்த்தாள். சுந்தரம் மகிழ்ச்சிப் பெருக்கினால் நிலை தடுமாறிப்போனார். நெஞ்சை அழுத்திப் பிடித்தவாறு அவ்விடத்திலேயே இருந்துவிட்டார். ராகவன் அவரை அணைத்து ஆதங்கத்துடன் தடவிவிட்டான். ராஜியும், பாரதனும், ''அண்ணா!'' என்று அவனுடன் ஒட்டிக்கொண்டுவிட்டனர்.

ராகவன் சிறிது நேரம் அவர்களுடன் சகஜமாக உரையாடினான்.

அவர்கள் கனடாவுக்குப் புறப்பட்டதை அறிந்து கொண்டான். பேச்சுவாக்கில் அவன் சுந்தரத்தைப் பார்த்துக் கூறினான்.

''அப்பா! கொழும்பிலை வைச்சு என்னை அவங்கள் பிடிச்சுக்கொண்டு போய்ச் சித்திரவதை செய்த போதே நான் தீர்மானிச்சிட்டன், போராட்டம் தான் தமிழனுக்குள்ள ஒரே தற்காப்பு என்று. பிறகு, நீங்கள் வந்து காசைக்கட்டி என்னை வெளியிலை எடுத்த பின்னும் எனக்கு என்னிலையே நம்பிக்கை

பொது நூலகம் யாழ்ப்பாணம்
சண்டிக்குளி கிளை நூலகம்.

இருக்கயில்லை, அதனாலதான் அண்டைக்கே நான் றெயினிலை ஏறியிட்டன் பாசறையை நோக்கி. நீங்கள் என்னைப் பிரிஞ்ச கவலையைத் தாங்கமுடியாமல் உயிரையே மாய்க்க முற்பட்டதாகக் கேள்விப்பட்டன். எனக்கு வெட்கமாய்ப் போச்சுது, உங்கடை செய்கை. எங்கடை தாயகத்திலை எத்தினை பேர், எத்தினை விதமாய்ச் செத்துக் கொண்டிருக்கினம், அவையின்ரை இனசனங்கள் அந்தப் பிரிவுகளைத் தாங்கிக் கொண்டு இந்த மண்ணிலைதான் இருக்கினம். உங்கடை செய்கைக்குக் காரணம், நீங்கள் என்னெண்டால் உங்கடை குடும்பம் என்கிற ஒரு குறுகிய வட்டத்துக்குள்ளேயே, அதாவது கிணத்துக்கை இருக்கிற தவளை, கிணறுதான் உலகம் எண்டு நினைக்கிறதைப்போல, நீங்களும் வாழ்ந்திருக்கிறீங்கள். இப்பிடி இன்னும் கிணற்றுத்தவளைகளாகக் கொஞ்சப்பேர் எங்கடை தாயகத்தில என்ன நடக்குதெண்டு தெரியாமல் சுயநலமே சிந்தனையாய் இருக்கத்தான் செய்யினம். உங்களைப் போல உள்ளவை எல்லாம் கொஞ்சம் பரந்த மனத்தோடை வெளி நடப்புகளையும் பார்த்துச் சிந்திச்சு நடந்தியளெண்டால் நல்லது."

மகனின் வார்த்தைகள் அவரைச் சிந்திக்க வைத்தது. அதற்குள் அவன் "எனக்கு அவசர வேலை இருக்குது. போட்டு வாறன்" சொல்லிக்கொண்டே வாகனத்தில் ஏறிப் போய்விட்டான்.

திக்பிரமை பிடித்தவர் போல் அவர்கள் வாகனம் போன திசையைப் பார்த்துக் கொண்டே வெகு நேரம் நின்றார்கள். வாகனம் கிளப்பிய புழுதி புகையென மறைத்தது.

அன்று மாலை கிளாலி நோக்கிப் பயணமாகும் மக்கள் வரிசையில் சுந்தரம், குடும்பத்தவர் நின்று கொண்டிருந்தனர்.

சிறுகதைப் போட்டியில் முதலாவது பரிசாகிய ரூ 500/= மலரன்னை அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள். மலரன்னை "போர் உலா" எழுதிய கப்டன் மலரவனின் அன்னை என்பது குறிப்பிடத்தக்கது. இப்பரிசினை N.R. கோவிந்தசாமி அவர்களின் புதல்வர்கள் வழங்குகிறார்கள்.

# செய்தி சொன்னதும் பல்லி சொன்னதும்...

செய்தி:- கிழக்கு மாகாணத்தில் இரு தமிழரின் தலைகள் துண்டிப்பு.

பல்லி :- தமிழ்த்தலைக்குள் 'ரத்தனங்' (தங்கம்) இருக்குதோ என்று சோதிக்கினம் போல.

செய்தி:- டாங்கிகள் இழந்த கணமே பதவி விலகத் தீர்மானித்து விட்டேன். —சிசில்—

பல்லி :- அதுசரி மசினா! உன் ஊழல் என்ன மாதிரி.

செய்தி:- போர்க்களத்தில் பெண்கள் சாதனை.

பல்லி :- 'மகே அம்மே'

செய்தி:- கருத்துச் சுதந்திரம் வழங்கப்பட்டது.

பல்லி :- உது கருத்தடையல்ல; கருத்துத்தடை.

செய்தி:- வைத்திய சாலையில் குடிநீர் பெற முடியாமல் அவதி.

பல்லி :- கொட்டுது கொட்டுது பாரு அங்கே சொட்டுது சொட்டுது பாரு இங்கே.

செய்தி:- யுத்தத்தை உடன் நிறுத்தி பேச்சை ஆரம்பியுங்கள்.

பல்லி :- தேர்தலுக்கு டிங்கிரி நாடகம் போடுகிறார். புத்தி ஜீவியே ஏன் அவசரம்.

செய்தி:- படைமுகாம் பகுதியிலும் வெள்ள ஆபத்து.

பல்லி :- வெள்ளத்தில் 'தவளையல்ல' 'முதலையும்' வரும். ஜாக்கிரதை!

செய்தி:- மதுபானம் அளவு குறைத்து விற்றதாக முறையீடு.

பல்லி :- வெள்ள மட்டம் உயருதென்று கவலையில்லை. 'தண்ணி' மட்டம் குறைஞ்சு போச்சென்ற கவலை.

செய்தி:- தொண்டா- செல்லா பிணைப்பில் விரிசல்.

பல்லி :- செய்யனே செல்லா, "செல்லம் கறண்ட எப்பா".



பொது நூலகம் யாழ்ப்பாணம்
சண்டிக்குளி கிளை நூலகம்.

கொழித்தல்

# நினைவழியா நாட்கள்

✻ ''போர்க்கால இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்துக் கொடுத்த கவிஞன் புதுவை'' - தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன்

✻ ''புதுவை ஒரு விடுதலைக் கவிஞன்'' பேராசிரியர் கா. சிவத்தம்பி.

✻ ''நினைவழியா நாட்கள் மானிடம் பாடும் கவிஞனுடைய கவிதைகளை கொண்டதொகுதி''- பேராசிரியர் அ. சண்முகதாஸ்.

✻ பலருடைய கவிதை நூல்களிலே எந்த வரியில் '' கவிதை'' இருக்கிறதென்று தேடவேண்டி இருக்கும், ஆனால் புதுவையின் கைபட்ட ஒவ்வொரு வரியும் கவிதை! கவிதை! கவிதையேதான்! சீமான் கவிதைக் கென்றே பிறந்த மன்னன்!

''நினைவழியா நாட்கள்'' நூலை நூறு ரூபா கொடுத்து வாங்கினேன். நூலை திறந்தவுடனேயே முதல் கவிதை '' காணிக்கையில் ''

''கண்ணைத் திறந்தாலே...... கல்லறைகள்
என்றான
மண்ணில் உறங்குகின்ற
மாவீரர் தாளடியில்........

என்று தொடங்கும் அந்த நான்கு வரிக்குமே நூறு ரூபாய் சரியாகபபோய்விட்டதுபோல ஒரு மனநிறைவு தோன்றுகிறது - முதறிஞர் வரதர்.

இப்படிப் பெரியவர்கள் எல்லாம் வாழ்த்தி நிற்க '' நினைவழியா நாட்கள் '' நெஞ்சில் மூட்டிய நெருப்பு இன்னும் செந்தணலாக கனன்றுகொண்டேதானிருக்கிறது. இதற்கு 'முறவன்' எப்படி விமர்சனமெழுத முடியும் சிரித்திரன் ஆசிரியர் கொடுத்தார் என்பதற்காக யாராவது No. 1 அரிசியையும் கொழித்துக்கொண்டு இருப்பார்களா? அதனால்தான் முறவன் இங்கே தன்னை '' புதுவைதாசனாகவே'' பிரகடனப்படுத்திக் கொண்டு எழுதவேண்டிய தேவை இருக்கிறது. ஏனென்றால் எங்கள் புதுவை சாதாரணக் கவிஞன் அல்லவே. இன்னும் முலைபார்த்து வெண்பா முன்னூறு எழுதுகின்ற மனிதா! உன் முலைபார்த்த வெண்பாவை மூடிவிட்டு ''கவிஞா எழு! காலத்தைப் பதிவு செய்!'' என்று அறை கூவல் விடுக்கும் தகுதியமைந்த கவிஞனல்லவா புதுவை.

அவனால்தானே சாட்சிகளற்ற அந்தச் சாமப் பொழுதுகளிலும், உறக்கம் வராத கவிஞனாக எழுந்திருந்து '' கிட்டவா ஒரு கிரனேட் வெடித்தது; கிலியடைந்தவூர் எழுந்து படுத்தது'' என்று பாடிக்கொண்டிருக்க முடிந்தது.

அவனுடைய நினைவழியா நாட்களினூடாக 'விடிவுக்காக காத்திருக்கும் சின்னக் கிராமத்தையும்' 'வைகறைப்பொழுதையும், வைரவர் கோயில் முடக்கையும்'' 'நெருப்பு நீரில் நீந்துகின்ற எங்கள் தாயகத்தையும் பார்க்கும்போது உண்மையிலேயே இந்தப் புழுதி பறக்கும் செம்பாட்டு மண்ணில் ஒரு தரம் ஆசைதீரப் புரண்டெழ வேண்டும்போலத் தோன்றுகிறது. எங்கள் தேசந்தான் எவ்வளவு அழகு அதற்கு கூட ஆடைகட்டி அழகுபார்க்க வந்தசிலர் இருந்த கோமணத்தையும் கொண்டு போயினர், சத்திர சிகிச்சையே சரியெனச் சொன்னவர் கத்திரிக்கோலையே களவாடிச் சென்றனர் 'தம்பி மட்டும் தளராதிருந்தானே' அவனை வாழ்த்தத்தான் வேண்டும். 'பாயிரம் ஆகப்போகும் பரணியின் தலைவன் தன்னை' எங்கள் விடுதலைக் கவிஞன் விட்டுவைப்பானாஎன்ன? 'பொங்குமா கடலின் ஓரம் பிறந்ததோர் புயலின் மையம் .' என்று அவன் தொடங்கும்போதே மெய்சிலிர்க்கிறது.

நேருமகள் பெற்ற நெடுமகன் எமது தாய்நாட்டின் மீது படை எடுக்கிறான்! இமயநாடே எங்களுக்கு குழி பறிக்கிறது! எங்களுக்கோ அதிர்ச்சி. இந்தக் கவிஞன் மட்டும் வீறாப்புடன் எழுந்து பேசுகிறான்.

'வேங்கைகளும் - தமிழீழ வீரமண் என்பதுவும்
பஞ்சாப்பா?அன்றிப் பாகிஸ்தான் பனி நிலமா?
அஞ்சிப் பயந்தொடுங்க அசாமின் சிறுகுழுவா?
இல்லையடா! தமிழீழம் எரிமலையின் வாசலடா!'

பூரித்துப் போகிறோம்.

'வாலிபத்தின் வைகறையில் இருந்த போது
வலிமை மிகு என்கவிதை தன்னை - வீணே
பாலியலைப் பாடுதற்காய் விரயம் செய்தேன்
பாழ்நிலத்தில் விதையெறிந்து பயிரைக்காக்க
வேலியும் நான் இட்டிருந்தேன் - ஆனாலெந்தன்
விழிகளையென் அன்னையவள் திறந்தேவைக்க
கூலிகளின் துயர் துடைக்கக் கவிதைபாடும்
கூட்டத்துட் போய்ச்சேர்ந்தேன் கவிஞனானேன்'

தான் எப்படி 'கவிஞனானேன்' என்பதைக்கூறும் இந்தக்கவிதை முக்கியத்துவம் வாய்ந்த அருமையான ஓர் கவிதையாகும். ஆனால் துர்அதிஸ்டவசமாக அது இந்தத் தொகுப்பில் இடம்பெறவில்லை. கட்டுப்பெத்தை வளாகம் 1974 இல் வெளியிட்ட 'நுட்பம்' இதழில் இடம்பெற்ற இக்கவிதை நிச்சயம் அடுத்த பதிப்பில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டிய ஒன்று.

இன்று விடுதலைப் புலிகளின் கவிக்குரலாகவும்' ஆஸ்தான கவிஞராகவும் வர்ணிக்கப்படத்தக்களவு புதுவை ஓர் விடுதலைக் கவிஞராக பரிணமித்திருக்கிறார்.

'கேட்கவொரு நாதி கிளர்ந்தெழும்ப ஒரு கூட்டம்.
மீட்கவொரு இயக்கம், மூச்சுவிட ஒரு கவிஞன்.
கட்டாயம் தேவை' என்ற காலத்தின் குரலாக
அவரது குரல் ஒலிக்கிறது.

'மல்லிகை'யில் மலரத் தொடங்கிய இந்தக் கவி மலர் இன்றும் 'வெளிச்சத்தில்' பிரகாசித்துக் கொண்டேதானிருக்கிறது. தொடர்ந்தும் பிரகாசிக்க வேண்டுமென 'நினைவழியா நாட்களைச்' சுமக்கும் தமிழுலகம் சார்பில் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம் ஒவ்வொரு தமிழன் வீட்டிலும் இருக்கவேண்டிய புத்தகம் '' நினைவழியா நாட்கள் ''

- முறவன்.

பொது நூலகம் யாழ்ப்பாணம்
பொது நூலகம் யாழ்ப்பாணம்
கண்டிக்குளி கிளை நூலகம்.

'கவர்' கவிதை

# தர்மம் தமிழ் காக்கும்!

தொட்டுத் திருகியதால், துடிக்கிறது
'தமிழ்த்தேசம்'
எட்டித் தனித்திடும் முன்......ஆ!
குருதி சிந்திறது!
சுட்டுப் புதைத்ததெல்லாம் தோண்டவரும்......
'ஆட்சிபுகழ்'
கெட்டித்தனம் இங்கு கைமுறிந்தும்......
கெடுக்கிறது!
சட்டம் அதர்மத்தின்
சாதனமாய் ஆண்டிடுமா?
கட்டும் விலங்கெங்கள் கால்விழுமா?
மானிடத்தை
வெட்டும் கரம் மீண்டும் வேர்விடுமா?
இல்லையடா.....!
சுட்டுத் தணலாக்கும் தர்மத்துள்
'அரக்கக்கை'
பட்டுப் பொசுங்கும் பார்!
பதைபதைக்கும் புறாக்குஞ்சின்
சொட்டும் உயிர் ரத்தம்,......வீணாகா......
சரித்திரத்தைச்
சுட்டும்; சுபீட்சத்தைச் சுவாசிக்கும்
இது உறுதி!

- த. ஜெயசீலன்

# தேடல்

ஏசுவைத் தேடி
உலகெலாம் அலைந்தேன்
எல்லா மனிதரும்
பாலன் பிறப்பைக்
கொண்டாடும் போது
குழந்தை ஏசு
சிலுவையின் நிழலாய்
தொங்கிடக் கண்டேன்
உண்மை மனிதம்
நிழலில் வளரும்
நித்திய ஜீவன்
என்ற புது மொழி
ஏசுவின் மொழியாய்
என் மனம் கேட்டது.

பாரச் சிலுவையை
சுமந்தவர் நினைவில்
தாமும் சுமப்பதாய்
பாசாங்கு செய்து
பாவச் சுமைகளைச்
சுமந்திடக் கண்டேன்
ஏசுவின் உடலினைத்
தாங்கிய ஆணிகள் பேசின
சத்தியம் என்பது
எம்மிடம் மட்டுமே
உருவ வேடங்களே
உலகக் காட்சிகள்
எனினும் என்மனஅலைகள்
தேடலைத் தொடரும்.

– வளவை வளவன்

ஒருவர்:- நாளைக்குப் பெண் பார்க்க வருவினம்; பிள்ளையை சீவி முடித்துச் சிங்காரித்து வைத்திருக்கவேணும்.

மனைவி:- பக்கத்தில்தானே அருள்நாயகி புத்தகசாலை இருக்கு; அங்கு அழகுசாதனப் பொருட்கள் வாங்கினால் போச்சு.

★ அழகுசாதனப் பொருட்கள் ★
★ பாடசாலை உபகரணங்கள் ★
★ பாதணிகள் ★

அனைத்துக்கும் நாடுங்கள்

# அருள்நாயகி புத்தகசாலை

12, பேருந்து நிலையம்.
கொடிகாமம்.

---

கடைத்தேறல் நன்று
கடையைத் தேர்ந்தெடுத்தலும் நன்று.
சங்கத்தானையில் உங்களுக்கு நிறைவான இடம்

# மேஜர் ஸ்ரோர்ஸ்

★ பலசரக்குச் சாமான்கள்
★ பால்மா வகைகள்
★ பேப்பர் விநியோகஸ்தர்

சங்கத்தானை — சாவகச்சேரி

சிரித்திரன் குறுமணி

## பாசப் பிரிவினை

அது ஒரு உருக்கமான காட்சி. எல்லோருடைய கன்னங்களிலும் கண்ணீர் உருண்டோடியது. உண்மையில் அது துன்பியல் நாடகமே தான். இங்கிலாந்திலிருந்து வந்த தாய் குழந்தையை ஆயாவிடமிருந்து பிரிக்கச் செய்யாத இங்கிதமேயில்லை. விதம் விதமான இனிப்புக்களை கண் முன் காட்டினாள். பல பொம்மைகளை இயக்கிக் காட்டினாள், பலனளிக்கவில்லை. குழந்தை ஆயாவை இறுகப் பிடித்து விமானத்தளம் அதிர அலறியது. சிறிது நேரத்தில் அழுத குழந்தை ஆயாவின் கழுத்தில் அயர்ந்து தூங்கியது. தாய் இதுதான் நல்ல தருணமென உணர்ந்து பிள்ளையை ஆயாவிடமிருந்து வாங்கி விமானத்தினுள் ஏறினாள் விமானம் மேலே கிளம்பியது. மறுகணமே விமானம் மறைந்தது. விமானம் முகிலுக்குள் மறைவதைப் பார்த்த ஆயாவிற்கு உலகமே இருண்டது.

## தேவகானம்

உலகப் புகழ்பெற்ற வயலின் வித்துவான் பிறச் கிறெஸ்லர் (Fritz Kressler) தனது கச்சேரிகளின் மூலமாய் பெரும் பணத்தைச் சம்பாதித்தார். அவற்றில் பெருமளவு பணத்தை மக்களுக்கு தானமாக்கிவிட்டார்.

அவர் ஒருநாள் பிரயாணம் பண்ணும் பொழுது பெறுமதிமிக்க வயலின் ஒன்றைக் கண்டார். ஆனால் அதை வாங்கக் கூடிய பணம் அவரிடத்தில் இருக்கவில்லை.

பின்பு தேவையான பணத்தைச் சேகரித்துக் கொண்டு, அந்த வயலின் வைத்திருந்தவரிடம் சென்றார். அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக அவ்வயலின் வேறொருவருக்கு விற்பனையாகி விட்டது. உடனே அந்த வயலினை வேண்டியவரிடம் ஓடிச் சென்று அதை தனக்குத் தரும்படி கேட்டார். அதற்கு அவர் நான் வைத்திருப்பதற்கே வயலினை வாங்கினேனேயல்லாமல் அதை விற்பதற்கு அல்ல என்று கூறினார். மனமுடைந்த வித்துவான், அவரிடம் தான் ஒரு முறை அந்த வயலினை வாசிக்கத் தரும்படி வேண்டினார். ஒப்புக் கொண்டுஅவரும் கொடுத்துவிட்டார். வித்துவான் வயலினை வாசித்து அதன் சொந்தக்காரரின் மனத்தை கொள்ளை கொண்டு விட்டார். உடனே சொந்தக்காரர், இந்த வயலின் வீட்டில் பூட்டி வைக்கும் பொருளல்ல, இதன் தேவகானத்தை முழு உலகமும் இரசிக்க வேண்டுமெனக் கூறி, வயலினை வித்துவானுக்கே அன்பளிப்புச் செய்துவிட்டார்.




**பக்தன் :-** கோபுர வாசலில் வைத்த பாதணியை கோவிலுக்குள் நின்று தியானிக்கும் அடியார்.

**இயமன் :-** சிபாரிசுப் பத்திரம் எதிர்பாராத பிரமுகர்.

**மூளை :-** கம்பியூட்டரைக் கண்டு பிடித்த கம்பியூட்டர்.

**மணமகன் :-** பணமுடிச்சுக்கு தாலி முடிச்சுப் போடுபவன்.

**நாக்கு :-** கதை அளக்கும் நாடா.

சிரித்திரு

முருகர் :- கோயில் அருகாமையில் இருந்து எவ்வளவு நின்மதி.

நேசர் :- கோயில் வீதி அகட்ட வேணும் உன்காணியில விட்டுத்தாருங்க.

முருகர் :- ஒருகதியால் அரக்கினாலும் கழுத்திலைதான் கத்தி விழும்.

அதிமதுரம்



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி கிளை நூலகம்.

## புதையல் கண்ட பிக்காசோ

எம்மவர் ''சித்திரம் தரித்திரம்'' என்று கூறு வார்கள். பிள்ளைகளை சித்திரம் படிக்கவே விடுவதில்லை. ஆனால் பிக்காஸோ என்ற ஓவியக்கலைஞன் தன் காலத்திலேயே தனது ஓவியம் ஒன்று கோடிக் கணக்கான ரூபாய்க்கு விற்பனையானதை தன் கண்ணாலே யே நேரில் கண்ட கலைஞர் பிக்காஸோ ஒரு வராகத்தான் இருக்கமுடியும்.

லியனார்டோ டாவின்ஸி தீட்டிய ''இராப் போசனம்'' போன்று, பிக்காஸோவினுடைய ''கொர்னிக்கா'' என்ற ஓவியம் உலகப் பிரசித்தி பெற்றது. இந்த ஓவியத்தை தீட்ட இவருக்கு இரண்டு மாதம் எடுத்தது.

அநேகமாக தலை சிறந்த ஓவியர்கள் 'மைக்கல் ஆஞ்சலோ' 'பிக்காஸோ' இவர்கள் தொண்ணூறு வயதுக்கு மேல் வாழ்ந்திருக்கிறார் கள். பிக்காஸோ ஸ்பெயினில் பிறந்திருந்தாலும் தமது வாழ்நாளில் பெரும் பகுதியை பிரான்ஸி லேயே கழித்தார். இவருடைய ஓவியங்கள் உலக அருங்காட்சி சாலைகள் எல்லாவற்றிலும் இடம் பெறுகின்றன.

**அதிமதுரம்**

சின்னையா :- மேளும் மேனும் கொழும்பா லை வந்தினம் எங்கே அவை?

பொன்னையா :- அவை கொட்டல்லை நிக் கினம். கொழும்பிலை லொட்ஜில் இருந்து பழகிப் போச்சு.

— சிரித்திரு



## சஞ்சீவி சிரஞ்சீவியாய் வாழ்க

தமிழீழம் சுயதேவையைத் தானே பூர்த்தி செய்து வளம் பெறவேண்டும் என்ற நோக்குடன் மரக்கன்றுகள், விதைகள் முதலியவற்றை இலவசமாகக் கொடுப்பதோடு ''பனையை வளர்ப்போம் பயனைப் பெறுவோம்'' என்று முதன் முதலாகக் குரலெழுப்பி நீண்ட காலமாக இத் துறையில் அருஞ் சேவையாற்றிவரும் மில்க்வைற் தொழிலதிபர் சிவதர்ம வள்ளல் க. கனகராசா அவர்களுக்கு சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம் 'சஞ்சீவி' என்ற பட்டத்தினை வழங்கியுள்ளது. உடற்பிணி அகல வைத்தியம் செய்பவர்களது சங்கம் பசிப்பிணிபோக்க வழிகாட்டும் பெரியாருக்கு 'சஞ்சீவிப்' பட்டம் வழங்கியமை பொருத்தமே.

தமிழீழத்தில் பொருளாதாரத்தடை என்ற கோடரி வீச்சினால் முடங்கிப்போன பல தொழிற்சாலைகளுள் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகமும் ஒன்றாகும். எனினும் 'சஞ்சீவி' சஞ்சீவியாகவே பயன் கொடுக்கிறது.

## வல்லையில் ஒரு சாதனை

நீண்ட பரந்த வல்லை வெளியில் ''சுதர்ஸனம்'' என்னும் மரம் வளர்ப்புத்திட்டம் ஒன்று 4 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப் பட்டுள்ளது. இதனை கரவெட்டி மா.கனகராசா என்பவர் நிர்மாணித்துப் பராமரித்து வருகின்றார்.

### சிரித்திரு

பத்தினியார் :- மருமேள் லண்டனிலை இருந்து கடிதம் போட்டாவோ

பொன்னாச்சி:- அவள் இப்ப தமிழைமறந்து போனாளாம்...
தேவாரம் இங்கிலிசில எழுதுவிச்சித்தான் பாடுறோளாம்.

— அதிமதுரம்

## நாடகத் தந்தையின் நினைவு

தமிழீழத்து நாடகத்தந்தை கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் ''ஈழத்தில் நாடகமும் நானும்'' என்ற நூலை எழுதுவதற்கு குறிப்பு எதுவும் எழுதிவைத்திருக்கவில்லை. தனது இளமைப் பருவத்துச் சம்பவங்கள், தான் சந்தித்த கலைஞர்கள், நாடக அனுபவங்கள் அனைத்தையும் ஆண்டு, திகதி, நேரம் என்பவற்றோடு தனது ஞாபகத்திலிருந்தே விரிவாக எழுதியுள்ளார்.

அவர் தனது வாழ்நாளில் தன்னைச் சந்திக்க வருபவர்களோடு பேசும் போதும், கூட்டங்களில் பேசும் போதும் தனது நாடக அனுபவங்களை ஆண்டு, திகதி முதலிய விபரங்களோடுதான் திரும்பத்திரும்ப சுவைத்துப் பேசி வந்துள்ளார்.

தனித்திருக்கும் போதுகூட அவைபற்றி நினைத்து தனக்குள் இன்ப சுகம் அனுபவித்து வந்தார். இரவில் நித்திரைவராத வேளைகளில் (அநேகமாக இரவில் தூங்குவதில்லை. இரண்டு மூன்று மணிக்கு மேல்தான் நித்திரை கொள்வார்) தனது பழைய நாடகக்காட்சிகளை ஆரம்பந் தொடக்கம் முடிவுவரை மனமேடையில் பார்த்துக் கொண்டிருப்பார். இதை அவர் பல தடவைகள் கூறியிருக்கிறார்.

எனவே 'ஈழத்தில் நாடகமும் நானும்' என்றநூலை ஆண்டு, திகதி முதலிய வரிசைக் கிரமங்களும் சம்பவங்களும் தவறாத நாடக அனுபவ நூலாக ஏற்கெனவே அவர் தனக்குள் உருவாக்கியிருந்தார் என்று கூறுவதே பொருத்தமாகும்.

## சமூகத் தூவானம்

இரு நண்பர்கள் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். திடீரென அவர்கள் சம்பாஷனை விடுப்பு வழி விரிந்தது, தூர இருந்த கதிரைகள் நெருங்கின. அயல் வீட்டுப் பெண்ணைப்பற்றி கேள்விப்பட்டியே என்று ஒருவர் தொடங்கினார். அடுத்தவரின் காதுகள் என்ன என்ன என்று விரிந்தன.



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
கண்டிக்குளி கிளை நூலகம்

பாலு :- எனது பாராட்டுக்கள்

நீ A/L பரீட்சையில் விசேட சித்தி அடைந்ததற்கு உனக்கு ஒரு சுவையான சிற்றுண்டி விருந்து தரவேணும்; வாரும் நாதன்ஸ் கூல் அன் கோப்பி பாருக்கு!

முத்து :- நன்றி......நன்றி......நன்றி.

**தரமான - சுவையான**

- சிற்றுண்டி வகைகள்
- பாண், பணிஸ், கேக்
- ரொபி, பிஸ்கற்


மற்றும் பாடசாலை உபகரணங்கள், பத்திரிகை விநியோகமும் செய்கிறார்கள்

# நாதன்ஸ்

## கூல் அன் கோப்பி பார்

**சங்கத்தானை** **சாவகச்சேரி**

# காசோலை மரம்



கற்பக தருவே உன்தன் கவலையை அறிவேனன் அன்று
நற்கவியுரைத்த காளமேகமும் கணிகை யென்று
சாற்றிய கவிதை தன்னை ஏற்றுநாமிருந்தோமென்று
வேற்றுமை கொண்டு வீணே வெறுப்பொடு சினங் கொண்
டாயோ?

சாற்றுதல் கேளிம் மண்ணில்''உப்பிலாப் பண்டம்''
குப்பையிலென்ற சொல்லை பொய்த்திட வைத்தவள் நீ
பனாட்டு புளுக்கொடியல் உப்பிலா உணவே என்று
மண்ணிதில் மறுத்து வெறுப்பவருண்டோ, உன்தன் நுங்கும்
உயர்பதநீரும், பாணி, பனங்கட்டி, கல்லாக்காரம், கிழங்
கொடு, ஓடியல், கள்ளு

நன்றென நவிலாருண்டோ நடைமுறை வாழ்விலுந்தன்
அணிவகை தாலம், தட்டு, பாயொடு, கடகம், பெட்டி, நார்,
தும்பு

கயிறொடு, துடைப்பம், ஏர்க்கால், கூடைப்பூ, பறியும், உறியும்
படித்திட ஏடுமென்று ஆயிரம் பயன்களீயும் அரியதோர்
சேவை தன்னால்

கனமணியுடைத்தோர் மன்னன் வழங்குநற் சேவைக்
கொப்ப

தினமுநீ சேவை செய்வாயுனக்கென ஏதும் வேண்டாய்
தரித்திரம் தீர்ப்பாய் தாக சாந்தியுமளித்தே ஏடு தூக்க
வும் ஆனதாலுன்

ஆசை வாய்க்கள்ளின் தீஞ்சுவை நினைத்த போதே
மோதிய உளத்தால் கனகமணிகை யுடைப்பெண்ணென்
றோத

நினைத்தவர் இடையிலுள்ள கனம தமை மறந்ததாலே
கணிகை என்று

சாற்றினன் போலுமிந்தக் காசினி வாழ்வில் காசினைக்
கணிப்பதாலே

கணிப்பதை ஈய்ந்துநிற்கும் காசோலைத் திருவாம்உன்னை
காசோலை(செக்) நிதியமென்றும் நிகரறுதமிழர் முதலே
மூலப்

பொருள் வளஞ்சுரக்கும் பேறே பெற்றிமை யாவு முன்னால்
பெற்றனம் பெறுவோமின்னும் கவலைகளற்று வாழக்
காசுகள் சொரியும் தருவே காசோலைத்திருவே மண்ணின்

கற்பகதருவே நீயும் கலங்கிட வேண்டா மிங்கு
அற்புதம் உன்தன் சேவை அனைத்தும் நீ நமக்காய் நல்கி
மாசோலையாகி நின்று மாற்றான் குண்டினைத்தடுப்பாய்
போற்றி

காசோலைத்தருவே போற்றி கவலைகளழிப்பாய் போற்றி
கா, சோ, காசோலை என்ற கணிப்புனக் கன்றியார்க்கோ?

**பனம்பாரன்**

## பனம் விதை நடுவோம்
## பணபலம் பெறுவோம்

- போட்டோஸ்ரட்
- றோணியோ
- ஸ்ரென்சில் வேலைகள்
- தமிழ், ஆங்கில தட்டச்சு வேலைகள் செய்து கொடுக்கப்படும்
- பாடசாலை உபகரணங்கள்
- தமிழீழ விடுதலைப் போராட்ட வெளியீடுகள்

அனைத்திற்கும்

# சுடர்

இல. 22, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

# சிரித்திரன் சிக்கல் VII இன் வெற்றிபெற்ற விடை

| | | | |
|---|---|---|---|
| 2 | 30 | 28 | 8 |
| 24 | 12 | 14 | 18 |
| 16 | 20 | 22 | 10 |
| 26 | 6 | 4 | 32 |

வெற்றி பெற்றவர்களின் விபரம்:-

முதலாம் பரிசு:- ரூபா 150/=
தே. பிரதீபன்
80/4 டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

இரண்டாம் பரிசு:- ரூபா 100/=
செ. யோகநாதன்
V. H. லேன்,
இருபாலை,
கோப்பாய்.

ஆறுதல் பரிசுகள் பெற்றவர்கள்:-
தலா ரூபா 50/-

1. செல்வி அருந்ததி
இந்து தமிழ்க்கலவன் பாடசாலை,
இறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

2. திருமதி யோகநாதன் உஷாமதி
அரசடி வீதி,
இருபாலை, கோப்பாய்.

3. செல்வி சுப்பிரமணியம் கங்காதேவி
தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.


4. திருமதி பரமேஸ்வரன்
சங்கானை ப. நோ. கூ. சங்கம்,
சங்கானை.

5. வ.வினேசன்
C/o வசந்தராஜா
முதலாவது ஒழுங்கை,
யாழ்ப்பாண வீதி,
உரும்பிராய்.


## கவிதை

இளங்கவிஞர்களுக்கான
இருதிங்கள் ஏடு!
சித்திரையில் வெளிவருகிறது!
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஆசிரியர்
'கவிதை'
இல. 1, ஒடைக்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

ஒருவர்:- பிள்ளையள் அந்நியநாடு போன தால் உன்னுடைய கணவன் என்ன வேணும் திருத்தம்?

மனைவி:- முன்பு உள்நாட்டு குடிவகை குடித் தவர் இப்போ அந்நியநாட்டுகுடி வகை குடிக்கிறார்.



ஆசிரியர்:- மாணவர்களே நீங்கள் அறிவு நூல்களுக்கு அலையவேண்டாம்.

★ பாலர் முதல் பல்கலைக்கழக மாணவர்வரை படிக்கும்பாடப் புத்தகங்களுக்கும்.

★ இலக்கியம், விஞ்ஞானம், ஆய்வியல் சஞ்சிகைகள் அனைத்திற்கும் தமிழ்த்தாய் புத்தகசாலை.



# தமிழ்த்தாய் புத்தகசாலை

191, மின்சார நிலைய வீதி,
பழைய பஸ் நிலையம் முன்பாக
யாழ்ப்பாணம்.

இங்கே வெட்டுக

# சிரித்திரன் சிக்கல் VIII

இங்கே வெட்டுக

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | 10 | |
| | | | |
| | | | |

பங்குபற்றுபவரின் பெயர்: ................................

முகவரி: ................................

................................

................................

வாசகர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

இங்கே வெட்டுக

இங்கே வெட்டுக

அறிவுறுத்தல்: (1) முடிவு திகதி 28 / 4 / 94

(2) மேற்காட்டப்பட்ட வெற்றிடமுள்ள சதுரங்களில் எண்களை இடுக. அச்சதுரங்களில் இடப்பட்ட எண்களின் கூட்டுத்தொகை கிடையாகக் கூட்டும் பொழுதும், நிலைக்குத்தாகக் கூட்டும் பொழுதும், மூலவிட்டமாகக் கூட்டும் பொழுதும் 146 ஆக இருத்தல் வேண்டும். ஒரு எண் ஒருதரம் மட்டுமே உபயோகிக்கப்படல் வேண்டும்.

(3) ஆசிரியரின் விடையுடன் ஒத்து முதலாவதாகவும் இரண்டாவதாகவும் தெரிவு செய்யப்படும் விடைகளுக்கு முதலாம் இரண்டாம் பரிசுகள் வழங்கப்படும்.
இது தவிர ஆசிரியரின் விடையோடு ஒத்த மேலும் ஐவருக்கு. தலா 50/- வழங்கப்படும்.

(4) முதலாம் பரிசு - 150/-
இரண்டாம் பரிசு - 100/-

**விதிகள்:**

(i) போட்டிப் பத்திரங்கள் முடிவுத் திகதிக்கு முன்போ அல்லது அன்றோ வந்து சேரத்தக்கதாக அனுப்பப்படல்வேண்டும். காலதாமதமாயின் நிராகரிக்கப்படும்.

(ii) போட்டிப்பத்திரங்கள் யாவும் சிரித்திரனில் பிரசுரிக்கப்பட்ட இதழிலேயே செய்யப்படல்வேண்டும். அவ்வாறில்லையேல் நிராகரிக்கப்படும்.

(iii) அனுப்பவேண்டிய முகவரி:- சிரித்திரன்
550, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**தபால் உறையின் இடது பக்கத்தின் மேல் மூலையில் "சிரித்திரன் சிக்கல் போட்டி VIII எனக் குறிக்கப்படல் வேண்டும்.**

(iv) போட்டிமுடிவுகள் சிரித்திரனில் வெளியாகும். பரிசுக்குரியவர்கள் தமது பரிசில்களை 550, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரில்வந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

(v) ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது. இது தொடர்பாக கடிதம் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ எதுவித தொடர்பும் அனுமதிக்கப்படமாட்டாது.

"வாசகர்களின் சிந்தனையைத் தீட்டுவதே சிரித்திரனின் அபிலாஷை"

*சிரித்திரன் சிக்கல் VIII இற்குரிய பரிசினை ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா உணவகம் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை) அவர்கள் வழங்குவார்கள்.*



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
சுண்டிக்குளி

## சந்திப்பூச்சரம்

# பண் இசை இரத்தினம்

வீசு தென்றலாக இதயங்களுக்கு இதமளிக்கும் குரலினிமை- அதில் பிரவாகிக்கும் இசைஞானம்- பண்ணிசை பற்றிய ஆழ்ந்த ஆராய்ச்சி அறிவு - திருமுறைகளின் அடித்தளங்களைக் கற்றுத் தேர்ந்த நூலறிவு. இத்தனையும் அருளப்பட்டவர் நயினாதீவைப் பிறப்பிடமாகக்கொண்ட நவரத்தினம். பண்ணிசைக்குப் புதுமலர்ச்சியை நல்கிவரும் அவர், இராமநாதன் /நுண்கலைப் பீடத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிகிறார். சிரித்திரன் சந்திப்பூச் சரத்தில் உங்களை இம்முறை சந்திக்கிறார்.

○ பண்ணிசை என்றால் தேவாரம் என்றே பலர் கருதுகிறார்கள். இதற்குக் காரணம் என்ன?

△ பண்ணிசை தமிழனுடைய இசை. அவனது பண்பாட்டோடு, நாகரீகத்தோடு ஊறி வளர்ந்த மிகப் பழைமை வாய்ந்த உன்னத கலை. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று தமிழர்கள் நிலத்தை நால்வகையாகப் பிரித்து வாழ்ந்தார்கள். இந்த நிலங்களுக்கு என்னென்ன பண் உரியது என்று வகுக்கப்பட்டு இசைக்கப்பட்டதாகவும் பண்ணைப் பாடுபவர்கள் பாணர்கள் என்றும் அவர்கள் ஐந்து வகையான யாழ்களை வைத்திருந்தார்கள் என்றும் தொல்காப்பியம், சிலப்பதிகாரம் போன்ற பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றன. காலப்போக்கில் பண்ணிசையை அழிந்து போகாது பாதுகாத்துக்கொண்டிருப்பவை தேவாரங்கள். அதனால் பண்ணிசை என்றால் தேவாரம் என்று கருதுகிறார்கள்.

○ தமிழரது பாரம்பரியம்மிக்க இந்த இசை மக்கள் மத்தியில் ஏன் நலிந்து போனது?

△ அரசியல் மாற்றங்களால் ஏற்பட்ட மொழிவெறிதான் இதற்குக் காரணம். இந்த இசையை வளர்த்தவர்களை ஆதிக்கத்திலிருந்த மொழிவெறியர்கள் பட்டினி போட்டார்கள். இது சம்பந்தமான நூல்களைக் கடலில் எறிந்தார்கள்; எரித்தார்கள். இப்படி பண்ணிசையை அழிப்பதற்கான வேலைகள் செய்யப்பட்டன. பின்பு அருளாளர்களாகிய நாயன்மார்கள் அவதரித்து தேவாரங்களை பண்களிலே பாடி அவற்றிற்குப் புத்துயிரளித்தார்கள்.

○ புத்துயிர் பெற்றதோடு மீண்டும் பரந்தளவில் வளராது தேவாரங்களோடு மாத்திரம் பண்ணிசை தேக்கமடைந்த காரணம்?

△ தமிழரது இசையை தமிழரே ஆதரிக்கவில்லை. தமிழ்ச் சாகித்தியங்கள் இசைக்கப்பட்ட முறையை விட்டு வேற்று மொழிச் சாகித்தியங்களில் நாட்டம் கொண்டார்கள். இதை வளர்க்க வேண்டும் என்று ராஜா அண்ணாமலைச் செட்டியார், மறைமலை அடிகள், கவியோகி சுந்தானந்த பாரதியார், கி. ஆ. பெ. முதலியோர் பல முயற்சிகள் செய்தார்கள். ஆனால் எழுத்தளவோடு நின்றுவிட்டன.

○ பண்ணிசையில் உள்ள பண்கள் கர்நாடக இசையில் ராகங்கள் என்று வேறு பெயர்களால் சுட்டப்படுகின்றன. அந்தாளிக் குறிஞ்சி, கௌசிகம், தங்கேசி முறையே கர்நாடக இசையில் சாமா, பைரவி, காம்போதி என்று ராகத்தின் பெயர்களாக வழங்கப்படுகின்றன. இப்படி பல பண்களையும் ராகங்களையும் கூறலாம். இதை விளக்குங்கள்.

△ பண்ணிசைதான் கர்நாடக இசைக்கு மூலமானது. அதிலிருந்துதான் கர்நாடக இசை பிறந்தது. இராவணன் இசைத்த பண்ணிசை வடிவத்தையொட்டியே பின்பு சாமவேதம் செய்யப்பட்டது. அகத்தியர்காலத்திற்கு முன்பே தமிழிசையாகிய பண்ணிசை சிறப்புற்று இருந்தது. இவைகளை ஆதாரங்களோடு விளக்கமுடியும்.

○ கர்நாடக இசையினை ராகம், தாளம், பல்லவி என்று ஓர் இசைக்கலைஞன் தனது மனோதர்மத்திற்கு ஏற்ப குறிப்பிட்ட ராகத்தின் லாவண்ய வடிவத்தை வெளிப்படுத்த முடியும். பண்ணிசையை அப்படிப் பாட முடியுமா?

△ ஆம். இசை பேதம், சந்த பேதம், யாப்பு பேதம் என்ற முறைகளில் அப்படிப்பாடலாம். இசையி

லும் இயலிலும் மிகுந்த பாண்டித்தியம் இல்லாமல் இம்முறையினைப் பின்பற்றி பாடமுடியாது. இது ஒருவரின் வித்துவத்தைப் பொறுத்தது.

○ பண்ணிசை இங்கு எந்தளவிற்கு மக்கள் மயப்பட்டுள்ளது?

△ இதனை மக்கள் மயப்படுத்துவதற்கு சேர் பொன் இராமநாதன், ஆறுமுகநாவலர், பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஆகியோர் நிதியொதுக்கி அறக் கட்டளைகள் எழுதினார்கள். எனினும் இது சரியாக பயன்படுத்தப்படவில்லை. முறைசாராத பண்ணிசை வளர்ச்சிக்கு பல இசைக்கலைஞர் பணியாற்றியுள்ளனர். எனினும் இப்போதுதான் வளர்வதற்கான முதற்கட்டத்தில் பண்ணிசை உள்ளது.

○ எம்மத்தியில் பண்ணிசையின் எதிர்காலம் பற்றி கூறுவீர்களா?

△ இந்த இசை தேவாரத்துடன் மாத்திரம் நிற்காது விரிவடைந்து தமிழனது தேசிய இசையாக வேண்டும். இன்று பல்கலைக் கழகத்தில் தனித்துறையாக பண்ணிசை விளங்குகிறது. எதிர்காலத்தில் தனிப்பீடமாக இயங்கக் கூடிய அளவுக்கு உணர்த்தப்பட்டுள்ளது. தென்னாசிய கலை வரலாற்றில் இதன் மகத்துவம் சிறந்த முறையில் எதிர்காலத்தில் உணரப்படும்.

○ பண்ணிசையில் தங்களைப்பற்றி......

△ எமது குடும்பத்து முன்னோர்கள் புலவர்களாகவும், இசைஞானிகளாகவும், ஆத்ம ஞானிகளாகவும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் ஆசீர்வாதம்போலும் எனக்கு, இளமையிலேயே பாடுவதில் மிகுந்த ஆர்வம். விவேகானந்த சபையும், திருக்கேதீஸ்வர திருப்பணிச்சபையும் நடத்திய பண்ணிசைப் போட்டியில் முதலாவதாக நான் தேர்ச்சி பெற்று அவர்களின் புலமைப் பரிசிலால் திருப்பனந்தாள் ஆதீன செந்தமிழ்க் கல்லூரியில் நான்கு ஆண்டுகள் திருமுறைப் பயிற்சி பெற்றேன். பின்பு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கர்நாடக இசை பயின்றேன். பண் இசையிலும் கர்நாடக இசையிலும் முதலாவதாகச் சித்திபெற்றுள்ளேன்.

1974இல் அகில இந்திய வானொலியில் 1 மணி நேர கச்சேரி செய்யும் கலைஞனாகத் தெரிவு செய்யப்பட்டேன். தமிழ் நாடு மாநில கவர்னர் இசைக்கான பரிசை இருதடவையும், நம்பியாண்டார்நம்பி திருமுறைப் பரிசை ஒரு தடவையும் பெற்றுள்ளேன். காஞ்சி காமகோடி சங்கராச்சாரியசுவாமிகள் தங்கத்தால் செய்த உருத்திராக்க மாலையை வழங்கி ஆசீர்வதித்துள்ளார். 1977இல் சென்னையில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாட்டில் பண்ணிசை பாடியுள்ளேன். அதே ஆண்டில் அகில இந்திய பல்கலைக்கழகங்கள் நடாத்திய விழாவில் இடம்பெற்ற வாய்ப்பாட்டுப் போட்டிக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலிருந்து நான் தலைமை தாங்கிச் சென்ற குழு முதலாம் இடம் பெற்றது.

திருமுருக கிருபானந்த வாரியார், கி. வா. ஜ, தெ. பொ. மீ. நாதஸ்வர வித்துவான் திருவெண்காடு சுப்பிரமணிய பிள்ளை முதலியோர் எனக்குப் பாராட்டும் ஆசியும் வழங்கியுள்ளனர்.

1988இல் திருப்பரங்குன்றம் சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் 120 ஆண்டுகளுக்குப் பின் நடைபெற்ற திருக்குடமுழுக்கு விழாவில் பண்ணிசை பாட இலங்கையிலிருந்து விசேடமாக என்னை அழைத்தார்கள். 1984 தொடக்கம் 1988 வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பண்ணிசை வகுப்புக்களை நடாத்தியுள்ளேன். 1984இல் இராம நாதன் நுண்கலைப் பீடத்தில் விரிவுரையாளராக நியமனம் பெற்றேன்.

மறைந்து போன பண்ணிசை மரபை மீண்டும் நிறுத்த ''பண்களின் யாப்பிசைக் கட்டளை பேதங்கள்'', ''பண்ணிசை இயல்'' ''பண் இலக்கணம்'' ஆகிய நூல்கள் நான் எழுதி நிறைவுறும் நிலையில் உள்ளன. விரைவில் இவை யாழ். பல்கலைக்கழக வெளியீடாக வெளியாகி மக்கள் கரங்களை அலங்கரிக்கும்.

—நவாலியூர் நடேசன்.



தரகர்:- இதுதான் பிள்ளை மாப்பிள்ளையின் படம்?

பெண்:- நான் மாப்பிள்ளைக்கு ஈரல், இருதயம் இருக்குதோ என்று எக்ஸ்றே படம் பார்த்து விட்டுத்தான் சம்மதம் தெரிவிப்பேன்.

இதய அரசிக்கு பிறந்தநாள்
பாசத்துக்குரியவர்களுக்கு பிறந்தநாள் **பரிசா**

- அன்பளிப்புப் பொருட்கள்
- பாட்டா பாதணிகள்
- எவர்சில்வர் பொருட்கள்

எல்லாவற்றிற்கும்

# VINAYAKAR STHABANAM

## வினாயகர் ஸ்தாபனம்

No. 19, JAFFNA POINT - PEDRO ROAD,
PUTUR.

கல்விநிலையம் வர்த்தக நிலையம்

ஆண்டு 3 முதல்
ஆண்டு 11 மீட்டல் வரை

★ பாடசாலை உபகரணங்கள்
★ பத்திரிகை விற்பனை

சகலவற்றிற்கும்

# சதா பொன்ஸ்

மாலுசந்தி, அல்வாய்.

# படிப்பு ஒரு கண்ணோட்டம்

"படிப்பு" என்னும் "படியாதவன்" எழுதிய நூலுக்கு அணிந்துரைகள் வழங்கியவர்கள் பல்துறைகளில் பட்டங்களைப்பெற்ற படித்தவர்கள். எனவே ஏன் "படியாதவன்" இவ்வாறு படித்தவர்களால் போற்றப்பட்டான்? ஆங்கில நாடகக் கவிஞன் ஷேக்ஸ்பியர் கல்விக்கும் அதன் கோட்பாடுகளுக்கும் வரைவிலக்கணங்கள் வகுத்த சொக்கிறேற்றிஸ், பிளாற்றோ, விஞ்ஞானத்திற்கு வித்திட்ட மேதைகளாகிய கலிலியோ ஆக்கிமிடீசு, சேர் ஐசாக் நியூற்றன் எல்லாருக்கும் மேலாக உலகப்புகழ்பெற்ற திருக்குறளை வாரிவடித்துத் தந்த திருவள்ளுவர், இவர்கள் அனைவரும் பல்கலைக் கழகங்களில் படித்தவர்களா? அவர்கள் வாரிசில் வருபவன்தான் "படியாதவன்." அதனால் "படியாதவன்" படித்தவன் என்னும் பதத்தின் கருத்திற்கு மேலாக வானில் மிளிர்கின்ற ஆதவன் போல் திகழ்கின்றான் என்றால் மிகையாகாது.

ஆறு அத்தியாயங்களை அடக்கியது "படிப்பு" ஒவ்வோர் அத்தியாயத்தையும் நான் வாசித்தேன். ஆசிரியன் அந்தந்த அத்தியாயத்திற்குரிய இலக்கையும். அது ஏன் விளைந்ததென்பதையும், அதை அடையும் வியாக்கியானங்களையும் தெட்டத்தெளிவாகக் கூறியுள்ளான். சுருங்கக் கூறின் ஒவ்வோர் அத்தியாயமும் கற்றல் - கற்பித்தல் என்பதனைப் பிரதிபலிக்கும் தளவாடிபோல தொழிற் படுகின்றது. இறுதி அத்தியாயமாகிய "ஐ ஓ'பாவம், இன்று ஆசிரியர்குளாமும் மாணவர் குளாமும் படும்பாட்டை விவரிக்கிறதாக அமைகின்றது. இங்கே யார் ஐ ஓ பாவம்? ஆசிரியர்களா! மாணவர்களா! பெற்றோர்களா! பெற்றோர்கள் மாணவர்கள் கற்கும் அவல நிலையைப் பார்த்து ஐ ஓ பாவம், மாணவர்கள்ஆசிரியர் கத்திப் படிப்பிப்பதைப் பார்த்து ஐ ஓ பாவம்' ஆசிரியர் மாணவர் படும் கஸ்டத்தையும் ரியூஷனுக்கு வாரி 'வாரிப் பணம்கொடுக்கும் பெற்றோர்களையும் பார்த்து ஐ ஓ பாவம் என்று ஒருவரைப் பார்த்து ஒருவர் சொல்வதையும் உயத்தறியக் கூடியதாக இருக்கின்றது, அவ்வத்தியாயம் இன்றைய கற்றல்:கற்பித்தலைப்பற்றி பார்க்கவைக்கும் நிலைக்கண்ணாடி யாக இருக்கின்றதை காணலாம்.

இந்நூல் ஆசிரியன் ஒரு, சிங்கம். அச்சமின்றி கூசாமலும், கோணாமலும் தனது வகுப்பறை அனுபவங்களின் நிமிர்தம் கற்றல்-கற்பித்தல் என்பவற்றில் நேரிடும் குறைபாடுகளையும், இடர்களையும். பிறரால் ஏற்படும் குறுக்கீடுகளையும் திடசித்தத்துடன் வெளிக்கொணர்ந்தது. இந் நூலுக்குஓர் அணிகலமாகும். இந் நூலை ஆசிரியர்கள் பட்டப்பின்படிப்பு ஆசிரியர்கள் மாணவ ஆசிரியர்கள், கல்விச்சிந்தனையுடையவர்கள் வாசித்தறியவேண்டியது அவர்களுடைய தலையாய கடனாகும். மேலும் கல்வியியலிற் பிரசித்திபெற்ற கல்வியியலாளரால் வாரிவழங்கிய கல்விக்கோட்பாடுகளும் வாக்கியங்களும் அநேகம் காணப்படுகின்றன. அவையும் "படிப்பு"க்கு அணிகலமாகும். நானும் கல்வீயைப் பற்றி தெரியாத விடயங்களை அவ்வாக்கியங்களுக்கூடாக அறிந்துள்ளேன். அதற்கு அவருக்கு எனது நன்றி உரித்தாகுக.

இறுதியாக "படிப்பு" "படியாதவன்'ஐ ஒரு கல்வியில் கலாநிதி ஆக்கிற்று.

அ. கருணாகரர்
முன்னைநாள் பிரதி அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

---

த. யோகேஸ்வரன்
அல்வாய் மேற்கு.
அல்வாய்.

இன்றைய போராட்ட காலத்தில் மக்கள் நோய்க்குரிய மருந்துகளுக்குக் கஸ்டப்படும்போது கொடிய நோய்களைத் தீர்க்கும் சிரிப்பு எனும் அருமருந்தினை அறிமுகப்படுத்தியமைக்கு சிரித்திரனை வாழ்த்துகின்றேன்.

எ. துவாரகா
அல்வாய் தெற்கு.
அல்வாய்.

ஒரு எழுத்தாளருக்கு இருக்கவேண்டிய தகமைகளை அனைவரும் தெரிந்துகொள்ளக் கூடியதாக எழுதிய கலைவாணன். என் எஸ் கிருஸ்ணனுக்கும்; சிரித்திரனுக்கும் எனது பாராட்டுக்கள்.

ஐ. அனோஜா
அல்வாய் மேற்கு.
அல்வாய்.

தமிழர்களைத் தட்டி எழுப்பியது யார் என நிலைக்கண்ணாடி ஊடாக 45 வருடகாலத்தில் சிங்கள அரசு தமிழர்களை ஒடுக்கிய வரலாற்றினை அரசாட்சி காலரீதியாகக் கூறிய சிரித்திரனுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

செ. சுதர்ஸ்மன்
அல்வாய் தெற்கு.
அல்வாய்.

பலரசம் எனும் விடயத்தின் ஊடாக உலகளாவிய விடயத்தினை எமக்கு வழங்கிவரும் சிரித்திரன் பல்லாண்டு காலம் தமிழ் உலகில் திகழ எனது நல்லாசிகள்.



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
கண்டிக்குளி கிளை நூலகம்.

# பின் சிரிப்பு

பரமு :- பண்டாரநாயக்கா காலத்துக்கும் டிங்கிரி காலத்துக்கும் ஒரு வித்தியாசம்.

சோமு :- என்னது?

பரமு :- பண்டாரநாயக்கா காலத்தில் போட் பலகைக்கு தாறு பூசினாங்கள். டிங்கிரி காலத்தில் கடிதத்துக்கு பசை பூசு றாங்கள்.

---

வேலு :- தம்பி என்ன படிச்சனி?
மனோ:- ஒண்டும் படிக்கவில்லை, ஒலிபெருக்கியால் படிப்பு குழம்பிப் போச்சு!

வேலு:- இப்ப என்ன செய்யிறாய்?

மனோ:- ஒலிபெருக்கி வாடகைக்கு கொடுக்கிறன்.

---

மணியம்:- முந்தி கொழும்பாலை அன்னாசிப் பழம் கொண்டு வருவினம் இப்ப ஒல்லித் தேங்காய் கொண்டும் வருகினம்'

ரத்தினம்:- இப்ப கிளாலிப் பயம். ஒல்லித் தேங்காய் வேணும் தானே.

---

ஒருவர்:- என்னுடைய மிஸ்ஸிஸ் தேடியபடி

மற்றவர்:- என்ன கடவுளையா தேடுகிறார்?

ஒருவர்:- பேனை, திறப்புக் கோர்வை, மூக்குக் கண்ணாடி, குடையை, செருப்பை எங்கேயேனும் வைத்துவிட்டு எங்கேயேனும் தேடுவது.

---

ஒருவர்:- பாட்டாவிற்கு இப்ப காய்ச்சல் எவ்வளவில் காய்கிறது.

மற்றவர்:- அது ஒரு நியையில் இருந்தால் தானே சொல்றது. மண்ணெண்ணெய், தே. எண்ணெய் விலை போல ஏறி இறங்குது.

---

ஆசிரியர் :- அந்த கால கிராமப் பெண்ணுக்கும் இந்தக்கால கிராமப் பெண்ணுக்கும் என்ன வித்தியாசம்.

மாணவன்:- அந்தக்காலப் பெண் தண்ணிக் குடத்துடன் போவாள்.
இந்தக்காலப் பெண் மண்ணெண்ணைக் 'கான்' னுடன் போவாள்,

---

ஒருவர்:- யாழ்ப்பாண மாணவர் கல்வி வினா விடைக் கல்வி!

மற்றவர்:- ? ! ! ! ? ?

ஒருவர்:- யாழ்ப்பாணத்தில படித்தமகள் தன்னுடைய கடிதத்திற்கு 'விடை' எழுதட்டாம்.

---

கிளாக்:- சேர் உங்களுடைய கொம்பனி வேலையை ராஜினமா செய்திட்டு அரசாங்க வேலையிலை சேரப்போறன்.

மனேச்சர்:- ஏன்!

கிளாக்:- அரசாங்க வேலையில் நல்லாத் தூங்கலாம் சேர்.


---

பண்டிதர்:- மகனை பரினாசமாய்ப் போ என்று திட்டாதே.

மனைவி:- ஏன்?

பண்டிதர்:- பரீட்சையில் 'பரி' ஓடி 'அம்பிட்டுப் போவன்.

---



பெண்: நோயாலைதான் எனக்கு கவலை யாக இருக்கு.

ஆண்: இனியுமா கவலை "வில்லியம் ஹாவே" தனியார் மருத்துவமனை இருக்கிறதே.

பணிவன்பான சமாரித்துவ. சேவைக்கு வில்லியம் ஹாவே தனியார் மருத்துவமனை

எமது ஏனைய சேவைகள் சலுகைக் கட்டண அடிப்படையில்
**(Concession Rate)**

- *அனுபவம் நிறைந்த வைத்தியர்களின் 24 மணி நேர வெளி, உள் நோயாளர் சேவை. (24 Hours Service)*
- *சகல துறைகளிலும் வைத்திய நிபுணர்களின் ஆலோசனை (Specialist Consultation)*
- *சத்திர சிகிச்சை வசதி (Operation Theatre Facility)*
- *மகப்பேறுகூட வசதி (Maternity Section)*
- *பற்சிகிச்சை வசதி (Dental Surgery)*
- *ஆய்வுகூட பரிசோதனை வசதி (Laboratory Facility)*
- *ஈ. சி. ஜி. (E. C. G)*
- *விசேட மருத்துவ விடுதிகள் (Special Ward)*
- *இரவு / பகல் மருந்தகசேவை (Day & Night Pharmacy)*

# வில்லியம் ஹாவே

## தனியார் மருத்துவமனை

## William Harvey Private Hospital

இல. 17, கண்டி வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

No. 17, Kandy Road,
Chundukkuli,
Jaffna.